Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இலவச கணினிப் பயிற்சிநெறி - 2003
2002 CHILDREN'S PROGRAM
O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி
ஆரம்பம்:- 28-12-2002
05-03-2003
3.00 மணிக்கு
காலம்: 3 மாதம்
JAFFNA TECHNICAL INSTITUTE
No.07, Palaly Road, Jaffna.
(இலுப்பையடிச் சந்திக்கருகில்) (சி.254)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 14 (19.12.2002) வியாழக்கிழமை இதழ் : 79




# ராணுவ, கடற்படைத் தளபதிகள்

# யாழ். ஆயருடன் திடீர் சந்திப்பு!

## முக்கிய விடயங்கள் நேற்று மாலை ஆராயப்பட்டன

(யாழ்ப்பாணம்)

**இராணுவ, கடற்படைத் தளபதிகள் நேற்று திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்.நகர் வந்திருந்தனர். நேற்று மாலை, யாழ்.ஆயர் அதி.வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை அவர்கள் சந்தித்துப் பேசினர். இச்சந்திப்பின்போது முக்கிய விடயங்கள் பல ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.**

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குப் பின்னர் வடபகுதியில் உருவாகிவரும் சூழ்நிலை குறித்து ஆராயவதற்காக- இராணுவத் தளபதியும், கடற்படைத் தளபதியும் நேற்று யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்று, கொழும்பிலிருந்து விமானம் மூலமாக பலாலிப் படைத்தளத்துக்கு வந்தடைந்த இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஆகியோர், அங்கு உயர்படை அதிகாரிகளுடன் நடைபெற்ற பாதுகாப்புத் தொடர்பான உயர்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, அங்கிருந்து புறப்பட்டு- யாழ். நகருக்குச் சென்றனர். இவர்களுடன்- யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, வடபிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் சரத் வீரசேகர

(12ஆம் பக்கம் பார்க்க)



ஆயருடன் பேச்சு நடத்திய கடற்படைத்தளபதி, இராணுவத் தளபதி மற்றும் உயரதிகாரிகள்

## பாதுகாப்பு வலய மீள் குடியேற்றம் அரச தரப்பில் தொடர்ந்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் மக்களை மீள் குடியேற அனுமதிப்பது தொடர்பாக, கொழும்பில் பாதுகாப்பு உயர் வட்டாரங்களில் ஆராயப்புட்டு வருகிறது.

உயர்பாதுகாப்பு வலயம் குடாநாட்டில் பல பகுதிகளிலும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால், அந்த வலயத்தினுள் மக்களை மீள் குடியேற்றுவது என்பது தொடர்பாகவே ஆராயப்பட வேண்டியுள்ளதாக பாதுகாப்பு உயர் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனியன்று முகமாலையில் நடைபெற்ற பாதுகாப்பு உபகுழுக்கூட்டத்தில் பாதுகாப்பு வலயத்தினுள் மக்கள் மீளக்குடியமர்வது தொடர்பான பதிலைத்தர, அரசதரப்பினருக்கு விடுதலைப்புலிகளால் இம்மாதம் 21ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. ஒரு வாரத்துக்குள் மீள்குடியமர்வு தொடர்பான அரசின் பதில் கிடைக்காவிடின், அடுத்த பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் பங்குபற்றுவதில்லை எனவும் புலி

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் சடலங்களாக மீட்பு

புறக்கோட்டையில் தீ விபத்து இடம் பெற்ற கட்டடத்திலிருந்து நேற்று நண்பகல், 5 சடலங்கள் கருகிய நிலையில் மீட்கப்பட்டன. இவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இரத்தினம் பரராஜசிங்கம் (ஓய்வு பெற்ற எழுதுவினைஞர், காசாளர் - சரஸ்வதி ஸ்ரோர்ஸ், கொழும்பு) திருமதி பரராஜசிங்கம் சந்திராதேவி , பரராஜசிங்கம் தயாளினி (கவிதா- கணக்காளர், ஜோன்கீல்ஸ் நிறுவனம், கொழும்பு) , பரராஜசிங்கம் சுஜாதா (ஆசிரியை, கொழும்பு) , பரராஜசிங்கம் கஜன் ( மாணவன் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி) ஆகி

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மாநாட்டுக்கு பிரட்மனும் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் சிறான் அவலகத்தில் நாளை நடைபெறவிருக்கும் விசேட கூட்டத்தில், பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோனும் கலந்து கொளளவிருக்கிறார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்களும் தூதுவர்களும் கலந்து கொள்ளவிருப்பதும் குறிப்பிட்டத்தக்கது.

### விண்ணாணம் விநாசியர்



சனிக்கிழமையாவது சனத்துக்கு நிம்மதியான முடிவு கிடைக்குமோ...?

# புறக்கோட்டையில் நடந்த பேரழிவு பெற்றோல் குண்டு வீசப்பட்டதா?

## இறந்தோர் தொகை 17 ஆகியது

கொழும்பு - புறக்கோட்டை ஐந்துலாம்படிச்சந்தியில் இடம் பெற்ற தீவிபத்தில் இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரியுண்ட கட்டிடத்திற்குள் மேலும் பலர் இருப்பதாகவும் அவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா அல்லது எரியுண்ட நிலையில் இருக்கின்றார்களா என்பது குறித்து ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை கட்டிடத்தின் கீழ் தளத்திலிருந்து இரண்டு சடலங்கள் எரியுண்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன. தீ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு, தற்போது மீட்புப் பணிகள் இடம்பெறுகின்றன. சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் இதுவரை கணிப்பிடப்படவில்லை. இறந்தவர்களில்

(12ஆம் பக்கம் பார்க்க)

# அவசியம் ஏற்பட்டால் மட்டுமே ஜனாதிபதியைச் சந்திப்பேன்!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

சமஷ்டித் தீர்வு தொடர்பாக, அவசியம் ஏற்பட்டால் மட்டுமே ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவேன். அதற்கான தேவை இப்போது எழவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பேச்சுவாாத்தைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், அது தொடர்பான சகல விபரங்களையும் எமது அமைச்சர்கள் மூலம் ஜனாதிபதி சந்திரிகாவுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம. தொடா்ந்தும் அவ்வாறே செய்யப்பட்டும் வருகின்றது.

இந்த நிலையில் ஜனாதிபதி சந்திரிகா பேச்சுவார்த்தைகள் தொடாபாக தனக்கு எதுவும் தெரியாதெனகூறமுடியாது. சமஷ்டித் தீர்வு காண்பது தொடர்பாக ஏற்பட்டுளள இணக்கம் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப்பேச வேண்டிய அவசியம் ஏற்படும்போதே அவரைச் சந்திப்பேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# ஒலிபரப்புச் சாதனங்கள் புலிகள் சட்டபூர்வமாகவே தருவித்தனர்!

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ

விடுதலைப்புலிகள் இயக்கம் ஒலிபரப்புச் சாதனங்கள் தருவித்தது, சட்டபூர்வமான முறையில்தான் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணானடோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் இந்தச் சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன். உடனே அந்த உபகரணத்தை விடுவிப்பதற்கு முன் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று சுங்கப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தினேன்.

இதன் பிரகாரம் நான்கு நிபுணத்துவ உத்தியோகத்தர்கள் இதைப் பரிசீலிக்கும்படி அனுப்பப்பட்டனர். தொலைத்தொடர்பு சீராக்கல் ஆணைக் குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.சோமசிறி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பொறியியல்துறை மேலதிகப் பணிப்பாளர் நாயகம் உபாலி ஆரம்பவெல, விமானப்படையைச் சேர்ந்த கப்டன் குணவர்த்தனா, பிரிகேடியர் சுனில் சில்வா ஆகியோரே பரிசீலனை செய்தவர்களாவர் என்றும் -

இவை வானொலி ஒலிபரப்பு உபகரணம் என்றும், பாதுகாப்பு தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கு தடையாக இருக்காது என்றும் அவர்கள் சிபார்சு செய்தனர்.

இதன்பின் - பாதுகாப்பு அமைச்சின உத்தரவின்பேரில், பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்புடன் இந்த உபகரணம் குறிக்கப்பட்ட இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது என்றும் ஒஸ்ரின் பெர்ணான்டோ மேலும் கூறினார்.

## நூல் வெளியீட்டு விழா

பொன்னாலைப் பண்டிதர் பொன்னம்பலவாணரால் ஆக்கப்பட்ட 'திருவாதவூரடிகள் புராண சிந்தனம்' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரையை கலாசாலை விரிவுரையாளர் செ.திருநாவுசுக்கரசுவும், ஆய்வுரையை ஆசிரியமணி அ.பஞ்சாட்சரமும் நிகழ்த்தவுள்ளனர்.

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்



பெயர் :ம.சாளினி
முகவரி:நெடியகாடு வடக்கு, வல்வெட்டித்துறை.

ஏழாவது அகவையில்



பெயர் : பா.சாஜஹான்
முகவரி: பூதர்மட லேன், நீர்வேலி தெற்கு.

பத்தாவது அகவையில்



பெயர் :கு.துஷாந்
முகவரி:முடக்காடு, நெல்லியடி கிழக்கு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------

முகவரி:--------------------

பிறந்த ஆண்டு:--------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்

## இன்றைய நாள் இனிய நாள்

### 19-12-2002 - வியாழக்கிழமை

சித்திரபானு ஸ்ரீ, மார்கழி மீ, - 4ஆம் திகதி வியாழக்கிழமை

| | |
|---|---|
| *திதி* | :- பூரணை - இரவு 01-11 வரை அதன் மேல் அபரபட்ச பிரதமை. |
| *நட்சத்திரம்* | :- மிருகசீரிடம் நாள் முழுவதும். |
| *விரதம்* | :- பூரணை |

| | |
|---|---|
| மேடம் | :- நிம்மதிக் குறைவு, வயிற்றுநோய், ஆற்றல் குறைவு, தனநஷ்டம், கல்வியில் ஊக்கம் வேண்டும். |
| இடபம் | :- செல்வாக்கு, காரிய வெற்றி, புத்திரரால் மகிழ்ச்சி, புதிய ஆடை, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை. |
| மிதுனம் | :- அலைச்சல், வயிற்றில் நோய், கர்வம், பணச்செலவு, புத்திரரால் கவலை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| கர்க்கடகம் | :- கவலைகள் நீங்கும், பணவரவு, நண்பர்கள் சேர்க்கை, இறைவழிபாடு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| சிங்கம் | :- எடுத்தகாரியம் வெற்றி, தேகசுகம் நன்று, அதிகாரப பதவி, செல்வம், செல்வாக்கு. |
| கன்னி | :- குடும்பமகிழ்ச்சி, மனதுக்கு இசைந்த இன்பங்கள், குடும்ப மேன்மை, கல்வியில் ஊக்கம் வேண்டும். |

யாழ். கொக்குவில இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.

| | |
|---|---|
| துலாம் | :- வீண்பயம், காயமேற்படல், தகாத செயல், உடனலக் குறைவு, கவலை, பசியினால் இளைப்பு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| விருச்சிகம் | :- வாகன வசதி, பெண்களால் மகிழ்ச்சி, இனசன உறவு வலுத்தல், அறுசுவையுண்டி, கல்வி முன்னேற்றம், வியாபாரநிலை சமம். |
| தனு | :- தனலாபம், சுகவாழ்வு, காரியவெற்றி, நண்பர்கள் பெருக்கம், மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| மகரம் | :- சமூகத்தில் உயர்ந்த நிலை, தெளிந்த அறிவு, இனிமையான பேச்சு, பணவரவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |
| கும்பம் | :- நோயினால் கவலை, சந்தேகம், தனவிரயம், அலைச்சல், கல்வி முன்னேற்றம், வியாபாரமுன்னேற்றம். |
| மீனம் | :- பணவரவு, மண்ணைத்தொட்டாலும் பொன்வரும், அஞ்சா நெஞ்சம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |

லாலா சோப் நிறுவனத்தின் அன்பான வேண்டுகோள்

யாழ்.மாவட்டத்திலுள்ள ஒரு சில பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர்கள், முகாமையாளர்கள், களஞ்சிய பொறுப்பாளர்கள், கிளைமுகாமையாளர்கள், ஊழியர்கள் எமக்கு இதயபூர்வமாக ஆதரவுக்கரம் நீட்டுகின்றார்கள், அதேவேளை, சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எமது உள்ளூர் உற்பத்திப் பொருட்களை தட்டிக் கழிக்கின்றார்கள். எமது தயாரிப்புக்கள் சங்கங்களில் விற்க முடியாவிட்டால் அல்லது பழுதடைந்தால், திருப்பி எடுக்க நாம் தயாராக உள்ளோம். வருங்காலத்தில் எமது மண்ணையும், மக்களையும் வழி நடத்த உள்ளோர் இப்படியான நிலை தொடராமல், எமது உள்ளூர் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முன்னுரிமை தருவார்கள் என நம்புகின்றோம்.

லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.
(சி-327)

குளியலறைக்கு வேண்டிய செரமிக் கற்கள் அல்லது மாபிள்கள், ஓடு, சீமெண்ட் மற்றும் எஸ்லோன் பைப்புக்கள், பெயின்ற் வகைகள் இவையனைத்தையும் நியாய விலையில் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

JASMIR TRADERS
ஜஸ்மிர் றேடேஸ்
40, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
Hot Line: 0777 - 395909,0777 - 721708
நத்தார் பண்டிகையை முன்னிட்டு விஷேட கழிவுண்டு
(சி/328)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று கலைமாணி பட்டம் பெறும் எமது கல்லூரி மாணவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்

புதிய உயர் கல்லூரி
நிர்வாகி, விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.
(சி-330)

# சிறிலங்கன் எயர் லைன்ஸ் விமானங்கள் கட்டுநாயக்கவில் தரையிறங்கத் தடை!

## ஜனவரி 1ஆம் திகதி முதல் அமுலாகும்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமானநிலையத்தில் சிறிலங்கன் எயர் லைன்ஸ் விமானங்கள் டிசம்பர் 31ஆம் திகதிக்குப் பின்னர் தரையிறங்குவதற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாக விமான நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது.

சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்குவது மற்றும் தரித்து நிற்பதற்கான கட்டணங்களின் நிலுவையைச் செலுத்தாததாலேயே இத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக விமானநிலைய முகாமைத்துவம் அறிவித்துள்ளது.

விமான நிலையத்துக்கு செலுத்த வேண்டிய கட்டணம் 350 மில்லியன் ரூபா, நிலுவையாக உள்ளது. இதனை சிறிலங்கன் எயர் லைன்ஸ் நிறுவனம் செலுத்ததாததாலேயே, கட்டுநாயக்க விமான நிலையத்தில் இவ்விமானங்களைத் தரையிறக்க அனுமதிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

2003 ஜனவரி முதலாம்திகதியில் இருந்து இத்தடை அமுலுக்கு வருவதாகவும், இந்தத் தடை உத்தரவு குறித்துத் தாம், சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கும் அறிவித்துள்ளதாகவும் விமான நிலைய முகாமைத்துவம் தெரிவித்தது.

சிறிலங்கன் எயர் லைன்ஸ் விமானங்களின் சேவை இடைநிறுத்தப்பட்டால் கொழும்புக்கும் வெளிநாடுகளுக்கும் இடையிலான விமான சேவைகள் பெரிதும் சீர்குலையும் என்பதோடு, இலங்கையின் பொருளாதாரமும் பெரிதும் பாதிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சிறுதானிய செய்கைக்கு ஏற்பாடு

(மீசாலை)

உசன் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் சிறுதானியப் பயிர்ச செய்கையினை மேற்கொள்வதற்கு அப்பகுதிக்கான கமநல சேவை திணைக்களம் திட்டமிட்டுள்ளது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு சகல மக்களும் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்கும் படியும்- மேற்படி திணைக்கள அதிகாரி அறிவித்துள்ளார்.

இப்பகுதிகளில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்துள்ளமையால், அங்குள்ள பெருமளவு விவசாய நிலங்களில் பெரும்போகப் பயிர்ச்செய்கை பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மதிமுக தலைவர் வைகோ சிறை; இந்திய நாடாளுமன்றில் விவாதம்

பொடா சட்டத்தின் கீழ் தமிழக அரசால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள வைகோ குறித்து நேற்றுமுன்தினம் இந்திய நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டது.

ம.தி.மு.கவின் கொள்கைகளோடு உடன்பாடு இல்லாதபோதிலும், தாம் இந்த நடவடிக்கையை கண்டிப்பதாக மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சோம்நாத் சட்டர்ஜி தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் வைகோ கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளது குறித்துக் கவலை தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய இநதிய மத்திய உள்துறை அமைச்சர்,

இந்த விடயத்தை அரசாங்கத்தின் உரியதுறைகளின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகத் தெரிவித்தார்.

## தென்பகுதி சிறுவர் நட்புறவு

(சரசாலை)

வடபகுதியில் உள்ள சிறுவர்களுடன் நல்லுறவைப் பேணும் பொருட்டு தெற்கில் இருந்து சிங்கள, முஸ்லிம், பறங்கி இனங்களைச சேர்ந்த 11 சிறுவர்கள் யாழ்.வரவுள்ளனர்.

இவர்கள் வடக்கிலுள்ள முக்கிய இடங்களைப் பார்வையிடுவதுடன், இங்குள்ள சிறுவர்களுக்கு சீருடை மற்றும் பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கவுள்ளனர்.

இச்சுற்றுலாவுக்கான ஏற்பாடுகளை லயன் எயர் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. (34)

## எனது எண்ணப்படி நடக்காவிடின் உங்கள் பாதுகாப்பு தேவையில்லை

### பாதுகாப்பு ஊழியர்களுக்கு அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

எனது எண்ணப்படி நீங்கள் நடந்து கொள்ளாவிடில், நீங்கள் வெளியேறுங்கள். உங்கள் பாதுகாப்பும் எனக்குத் தேவையில்லை.

- இவ்வாறு தென்பகுதி அமைச்சா ஒருவர், தமது 11 பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார்.

அமைச்சரின் மகனுக்கும் அவரது பாதுகாப்பு ஊழியருக்கும் இடம் பெற்ற கருத்து வேறுபாடுகள் சம்பந்தமாகவே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 14ஆம் திகதி அமைச்சரின் மகன் தப்ரபேன் ஹோட்டலுக்கு தனது பாதுகாப்புக்கு வருமாறு பாதுகாப்பு ஊழியர்களைக் கேட்டபோது, அவர்கள் அதை நிராகரித்ததாலேயே அமைச்சர் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார் எனத் தெரியவருகிறது.

இதன் பின் பாதுகாப்பு ஊழியர்கள் சிலர் அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவில் இருந்து நீக்கப்பட்டனர் எனவும், குறிப்பிட்ட அமைச்சர் மஹிந்த விஜேசேகரவே எனவும் தெரியவருகிறது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### மந்திகை ஆஸ்பத்திரிக்கு தொலைபேசி

(வடமராட்சி கிழக்கு)

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு "டயலொக்" நிறுவனம் வயர்லஸ் தொலைபேசி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (17)

### திருவாசக முற்றோதல்

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு செஞ்சொற்செல்வர் மருதபிரான் தலைமையில் திருவாசக முற்றோதல் நடைபெற்றது.

### பூவரசம்பிட்டி மயானம் புனரமைக்கப்படும்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைப்பகுதியிலுள்ள பூவரசம்பிட்டி மயானம் சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (17)

### வருடாந்த பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு சங்கத்தின் தலைமைக் கட்டடத்தில் சங்கத்தலைவர் ந.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச)

## பெண்ணின் வயிற்றுக்குள் இருந்த கத்தி: விமான நிலைய கருவி காட்டிக்கொடுத்தது!

(ரொறன்ரோ)

சத்திரசிகிச்சையின்போது வைத்திய நிபுணர்களால் வயிற்றுக்குள் வைத்து தைக்கப்பட்டிருந்த சத்திரசிகிச்சைக் கத்தியை, விமானநிலைய சோதைனையிடும் கருவி அடையாளம் காட்டிய சம்பவம் கனடாவில் நிகழ்ந்துள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது, கனடாவைச் சேர்ந்த பெண் ஒருவர், தனது வயிற்றில் சத்திரசிகிச்சையொன்றைச் செய்திருந்தார். சுகமடைந்த இவர் விமானப் பயணம் ஒன்றுக்காக விமான நிலையத்துக்குச் சென்றிருந்தார்.

அப்பெண், அங்குள்ள உலோகங்களைச் சோதனையிடும் கருவியைத் தாண்டிச் சென்றபோது, அது ஒலியெழுப்பியது. இதையடுத்து உஷாரடைந்த விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள, அப்பெண்ணை முழுமையாகச் சோதனையிட்டபோதும் எதையும் அவரிடம் இருந்து கண்டுபிடிக்க முடியவில்லை.

இதையடுத்து பெண்ணை எக்ஸ்ரே பரிசோதனைக்குட்படுத்தியபோதுதான் விவகாரமே தெரியவந்தது.

பெண்ணின் வயிற்றுக்குள் சத்திரசிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் கத்தி ஒன்று இருப்பது எக்ஸ்ரே பரிசோதனையில் தெரியவந்தது. இதையடுத்து பெண் மீண்டும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டபோது, வயிற்றில் இருந்து 2 அங்குல அகலமான - 12 அங்குல நீளமாக வெட்டும் கத்தி வெளியே எடுக்கப்பட்டது.

## அனைவரையும் ஒன்றுபட கோருகிறார் ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

முஸ்லிங்கள் அனைவரும் வேறுபாடுகளை மறந்து நிபந்தனையின்றி ஒன்றுபட வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய மிலாதுல் விழாவில் கலந்து கொண்டு பேசியபோதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

கட்சியிலிருந்து பிரிந்து போனவர்கள் மீண்டும் வந்து இணைந்து கொண்டால் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

முஸ்லிம் மக்களின் எதிர்காலத்திற்காக அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்றும், அதற்கான ஆதரவினை வழங்க வேண்டும் என்றும் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### பான்ட் வாத்திய கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் பான்ட் வாத்திய இசைக்கருவிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இதற்கான நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுளளது. (17)

### யாழ்.மாவட்டத்தில் இறங்குதுறை அமைப்பு உருவாக்கம்

(மீசாலை)

புதிய கடற்தொழில் கொள்கை அடிப்படையில், கடற்தொழில் இறங்குதுறை அமைப்புக்களை மாவட்டந்தோறும் உருவாக்க கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்காக 100 மீனவக்குடும்பங்களையும், இறங்குதுறையைக் கொணடதுமான, இடங்களைத் தெரிவு செய்யும் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் இத்தகைய அமைப்புக்களை உருவாக்கி வருகிறது. (25)

### பொன்மணி திரைப்படமும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தில் தயாரிக்கப்பட்ட "பொன்மணி" திரைப்படம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 2 மணியளவில் நுண்கலைத்துறை மண்டபத்தில் திரையிடப்படவுள்ளது.

திரைக்காட்சி முடிவில் திரைப்படத் தயாரிப்புப் படிமுறை, திரைப்பட நடிப்புத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் நடைபெறவுள்ளது. இதில் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களையும், திரைப்படத்துறையில் ஆர்வமுள்ளவர்களையும் பங்குபற்றுமாறு நுண்கலைத்துறையினர் கேட்டுள்ளனர்.

சென்ற மாதம் இன்குலாப்பின் ஔவை நாடகத்தின் வீடியோக் காட்சியும், கலந்துரையாடலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 20 வருட மோதலுக்குத் தீர்வு காணும் வரலாற்று முக்கியத்துவமான நேரம்


### பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளர்

(லண்டன்)

உலகில் மிகவும் அழகான தீவான இலங்கையில் இருபது வருட காலம் நீடித்த யுத்தத்துக்கு முடிவு கட்டி- அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் இறங்கியுள்ளமை, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளர் ஜக் ஸ்ட்ரோ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணமாகும். அண்மையில் லண்டன் வந்திருந்த அமைச்சர் பீரிஸைச் சந்தித்துப் பேசிய போது, அடுத்த கட்டப் பேச்சுக்களில் மனித உரிமைகள் தொடர்பாகவும் பேசும்படி கோரினோம்.

அத்துடன், அடுத்தடுத்த கட்டச் சமாதானப் பேச்சுக்களில் மேலும் முன்னேற்றங்கள் ஏற்படும் என நம்புவதாகக் குறிப்பிட்ட பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர், 2003/2004 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 15 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களை பிரிட்டன் உதவியாக வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.


திருகோணமலையில் கடும் மழையினால் வெள்ளத்தில் மூழ்கிய அலஸ்தோட்டம் அகதி முகாம். (படங்கள் - கௌதமன்)

# முன்னர் உள்ளீடான சுய நிர்ணயத்துக்கு இணங்கிய சந்திரிகா இப்போது எதிர்க்கிறார்!

## அமைச்சர் பீரிஸ் வியப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு உள்ளக சுயநிர்ணயத்தின் அடிப்படையிலான தீர்வு ஒன்றை வழங்க- முன்னர், நான் அமைச்சராக இருந்தபோது, ஜனாதிபதி சந்திரிகா இணங்கியிருந்தார். இப்போது, அவர் சமஷ்டிக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது வியப்பாக இருப்பதாக அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புலிகளுடனான பேச்சுக்களில் அணுகுமுறைகளில் சில திருத்தங்களைச் செய்திருப்பதாக தெரிவித்த அமைச்சர் பீரிஸ், விரைவில் ஒஸ்லோவில் நடந்த பேச்சுக்கள் தொடர்பான விளக்கங்களை அளிப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகாவை அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்துப் பேசுவார் எனவும் குறிப்பிட்டார்.

இதன்போது அரசின் திட்டங்கள் குறித்தும் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தப்படும் என அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## நெடுமாறனை விடுவிக்குமாறு

# தமிழக அரசுக்கு அழுத்தம் கொடுக்க சர்வதேச மன்னிப்புச் சபைக்குக் கடிதம்

தமிழகத்தில் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனை விடுதலை செய்வதற்கான அழுத்தத்தை தமிழ்நாடு அரசுக்கு கொடுககும்படி சர்வதேச மன்னிப்புச் சபையை தமிழ் தேசிய கூட்டமைப்பு கோரியுள்ளது.

இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களும் கையொப்பமிட்டு, சர்வதேச மன்னிப்புச் சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

# மனிதாபிமான பிரச்சினையை அடுத்தே அரசியல் பிரச்சினை குறித்துப் பேசப்படும்

## மாலைதீவு தொலைக்காட்சிக்கு ரணில் பேட்டி



மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்ட பின்னர், அரசியல் பேச்சுக்கள் நடத்தப்படும் என மாலைதீவுத் தொலைக் கட்சிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாலைதீவுக்கு விஜயம் செய்திருந்தபோது அங்குள்ள தொலைககாட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்போதைய பேச்சுக்களில் மனிதாபிமான பிரச்சினைகளே இடம்பெற்றுள்ளன. முக்கியமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துதல், கண்ணிவெடிகளை அகற்றுதல், அழிந்து போன நகரங்களையும், கிராமங்களையும் மீள நிர்மாணம் செய்தல் என்பனவே அவையாகும்.

இதற்கு அடுத்த கட்டத்திலேயே அரசியல் பேச்சுக்கள் நடத்தப்படும். இந்தப் பேச்சுக்களின் மூலம் சகல இனங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றைக் காண்பதே எமது முக்கிய நோக்கம் என பிரதமர் ரணில் மேலும் தெரிவித்துள்ளார்.

# வன்னியில் கடும் மழை குளங்கள் பல நிரம்பின.

(கிளிநொச்சி)

வன்னிப் பகுதியில் பெய்து வரும் கடும் மழையினால், அங்குள்ள குளங்களின் நீர்மட்டங் கள் சடுதியாக உயர்ந்துவருகின்றன.

முத்தையன்கட்டுக் குளத்தில் - 11அடி 9அங்குலமாகவும், தண்ணீர் முறிப்புக்குளத்தில் 15அடி 2 அங்குலமாகவும். கணுக்கேணியில் 10 அடி 3 அங்குலமாகவும், துவரமோட்டையில் 10 அடியாகவும், உடையார் கட்டுக் குளத்தில் 20 அடி 6 அங்குலமாகவும், கருவேலன்கண்டல் குளத்தில் - 5 அடியாகவும், கூழாமுறிப்புக்குளத்தில் 7 அடியாகவும், கற்சிலைமடுக் குளத்தில் 9அடியாகவும், விசுவவமடுக் குளத்தில் 19 அடி 3 அங்குலமாகவும், மணவாளன் குளத்தில் - 8 அடி 4 அங்குலமாகவும், நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

இதேவேளை - கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக- உருத்திரபுரம், வட்டக்கச்சி, மாயவனூர், அக்கராயன், யூனியன்குளம், ஆனைவிழுந்தான், ஊரியான், கண்டாவளைப் பகுதிகளிலுள்ள சில இடங்களிலிருந்து மக்கள் வெளியேறியுள்ளனர்.

பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் 17 ஆம் கட்டை, காளிகோயிலடிப் பகுதியில் - வீதியை மேவி வெள்ளம் பாய்ந்து வருகின்றது.

# சமஷ்டித் தீர்வுமுறை வரவேற்கத்தக்கது

## றிச்சட் பத்திரன கூறுகிறார்

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறை மூலம் ஒரு தீர்வு காணப்பட்டால் அதைத் தாம் வரவேற்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான றிச்சட் பத்திரன தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்வு நிச்சயம் வரவேற்கப்பட வேண்டும். சமஷ்டித் தீர்வு குறித்துப் பேச்சு நடத்துவதற்கு முன்னர், தற்போது உலகில் நடைமுறையில் உள்ள சமஷ்டி அமைப்புக்களைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என றிச்சட் பத்திரன மேலும் தெரிவித்துள்ளார்.

# அத்துருகிரிய ஆயுதக் களஞ்சிய விவகாரம் விசாரணைக்குழுவின் பதவிக்காலம் நீடிப்பு

(கொழும்பு நிருபர்)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் இராணுவத்தின் விசேட படைப் பிரிவினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதக்கிடங்கு பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது தொடர்பாக ஆராய, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் பதவிக்காலம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்ட, மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜயவிக்கிரம தலைமையிலான ஆணைக்குழுவின் பதவிக் காலம் கடந்த நவம்பர் 16 ஆம் திகதியுடன் முடிவுற்றிருந்தது.

இந்த விசாரணைக்குழு கடந்த ஆறுமாதங்களில் மூன்று பேரிடமே விசாரணைகளை நடத்தியுள்ளதாகவும் தெரியவருகின்றது. பதவிக் காலம் நீடிப்புச் செய்யப்பட்டுள்ள நிலையில் இவ் விசாரணைக்குழு இராணுவ, பொலிஸ் அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (01)

## பொலிஸில் சரணடைந்த

# ரத்வத்தவின் மகன் பிணையில் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் மகன் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் சரணடைந்தார்.

பிரபல சிங்கள இசைக்குழுவின் பாடகர் ஒருவரைத் தாக்கியது சம்பநதமாகவே பொலிசாரினால் இவர் தேடப்பட்டுவந்தார்.

இவரை விசாரணைக்குட்படுத்திய பொலிசார், கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, 25ஆயிரம் பிணையில் செல்லுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# புறக்கோட்டைத் தீ விபத்து

## நச்சுவாயு சுவாசிப்பினாலேயே அநேகமானோர் மரணம் !

(கொழும்பு)

புறக்கோட்டையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தீ விபத்தில் உயிரிழந்தவர்களில அநேகமானோர் தீயினால் மரணமாகவில்லை என்றும், பட்டாசு வெடிப்பினால் எழுந்த நச்சு வாயுவைச் சுவாசித்ததாலேயே அதிகமானோர் மரணமானதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதம மருத்துவ அதிகாரி அனில் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

# முன்னாள் பிரிட்டிஷ் பிரதமரின் பஸ் கம்பனி பற்றி விசாரணை

## மாரப்பனவுக்கு ஜனாதிபதி உத்தரவு

பிரிததானிய முன்னாள் பிரதமர் ஜோன் மேயரின் நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஆறு பஸ் கம்பனிகள் தொடர்பான பூரண அறிக்கையைத் தமக்குச் சமர்ப்பிக்குமாறு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் ஜனாதிபதி சந்திரிகா கேட்டுள்ளார்.

போக்குவரத்துத் தொழிலாளரின் கூட்டமைப்பு என்ற தொழிற்சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றையடுத்தே போக்குவரத்துக்கும் பொறுப்பான பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

# கட்டுநாயக்கா விமானதளம் மீதான தாக்குதல்; விசாரணை அறிக்கை சட்டமா அதிபரிடம்!

## குற்றப்புலனாய்வுப் பிரிவு சமர்ப்பித்தது

(கொழும்பு நிருபர்)

கட்டுநாயக்க விமானப்படைத் தளம் மற்றும் விமான நிலையம் என்பனவற்றின் மீது கடந்த வருடம் ஜுலை மாதம் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பான, குற்றப்புலனாய்வுப் பொலிசாரின் விசாரணை அறிக்கை சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபருக்கு கையளிக்கப்பட்டுள்ள இந்த விசாரணை அறிக்கை 19 அத்தியாயங்களைக் கொண்டதாக ஆறாயிரம் பக்கங்களில் இடம்பெற்றுள்ளது.

இந்த விசாரணை அறிக்கையில், இத்தாக்குதல் தொடர்பாக 100 பேர் வரை பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும், இவர்களில் அநேகமானோர் பிணையில் விடுவிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், கைதானவர்களில் ஐந்து சந்தேக நபர்கள் மீது மட்டும் வழக்குத் தாக்கல் செய்யப் போதிய ஆதாரங்கள் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்து உயர் நீதிமன்றத்துக்கு சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணைகள் குறித்த மேலதிக சட்ட ஆலோசனைகளை குற்றப்புலனாய்வுப் பொலிசார் எதிர்பார்த்துள்ளதாவும் தெரியவருகின்றது.

கட்டுநாயக்க விமானத்தளம் மற்றும் விமான நிலையம் என்பனவற்றின் மீதான தாக்குதல்களின் போது, விமானப்படைக்குச் சொந்தமான போர் சமானங்களும், சிறிலங்கன் எயர் லைன்ஸ் பயணிகள் விமானங்களும் நாசமாக்கப்பட்டமை தெரிந்ததே.

(01)

# ஹக்கீமின் தலைமையை ஏற்க நூர்தீன் தயாராம்

முஸ்லிம் காங்கிரஸில் பிளவுகள் ஏற்பட்டுள்ளபோதும் தாம் ரவூப் ஹக்கீமை மீண்டும் தலைவராக ஏற்பதற்குத் தயார் என - வன்னி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரும், பிரிந்து சென்ற அதாவுல்லா தலைமையிலான அணியின் முக்கியஸ்தருமான நூர்தீன் மசூர் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற முஸ்லிம் மக்களுக்கான விழிப்புணர்வு தொடர்பான கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது, ரவூப் ஹக்கீம்- பொதுஜன ஐக்கிய முன்னணியை விட்டு வெளியேறும்போது தாமும் வெளியேறியதாகவும், இப்போது தமது கோரிக்கையான ஐந்து உறுப்பினர்கள் கொண்ட சுப்ரீம் கவுன்சிலை அமைப்பதற்கு இணங்கினால் அவருடன் ஒத்துழைக்கத் தயார் எனவும் தெரிவித்தார்.

# கிளிநொச்சிப் பேச்சுக்கள் உற்சாகமளிக்கின்றதொன்று!

## நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்

கிளிநொச்சியில் நடைபெற்ற வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கும் புனரமைப்புக்குமான குழுவின் செயலகத் திறப்பு விழாவினைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடல்கள் தமக்கு உற்சாகமளிக்கக் கூடியதாக அமைந்ததாக இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் தெரிவித்தார்.

அபிவிருத்தி, புனர்வாழ்வுக்கான செயலகத்தில் நடைபெற்ற பேச்சுக்களில் கலந்து கொண்டபின்னர் கொழும்பு திரும்பிய அவர், செய்தியாளரிடம் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும், சமாதானப் பேச்சுக்களில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் விரைவில் நடக்கும் என்றும் தெரிவித்தார்.

# யாழ்.குடாநாட்டில் கடற்றொழில் நடவடிக்கைகள்

தமிழின்பன்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

## அன்றும்

யாழ்.குடாநாட்டின் வருமானத்தில் கணிசமானதோர் பங்கினை வழங்கி வந்ததில் கடற்தொழில் முக்கியமான ஓர் இடத்தைப் பிடித்திருந்தது. 1983 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில், நாட்டின் மொத்த கடற்தொழில் உற்பத்தி கணிசமான பங்கு யாழ். குடாநாட்டினது என்றால் அது மிகையில்லை. சென்ற அத்தியாயத்தில் காரை நகர்ப் பகுதியின் கடற் தொழில் நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்திருந்தோம். இன்றைய அத்தியாயத்தில் வேலணை கடற்தொழில் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட பகுதியின் கடற்தொழில் நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்போம்.

வேலணைக் கடற்தொழில் பரிசோதகர் பிரிவானது யாழ்.குடாநாட்டிலிருந்து பண்ணைப் பாலத்தினால் பிரிக்கப்படுகின்றது. இக்கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள் அடங்கும் பகுதிகளான -

1. மண்டைதீவு
2. அல்லைப்பிட்டி
3. செட்டிபுலம்
4. துறையூர்
5. வேலணை மேற்கு
6. புங்குடுதீவு கிழக்கு
7. புங்குடுதீவு மத்தி
8. புங்குடுதீவு மேற்கு

1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இப்பகுதிகளில் குறிப்பாக - மண்டைதீவு, புங்குடுதீவு, துறையூர் போன்ற இடங்களில், கடற்றொழிலாளர்கள் F.G.B எனப்படும் இயந்திரப் படகுகள் மூலம் தொழிலில் ஈடுபட்டனர். இப்பகுதிகளில் பிடிக்கப்படும் மீன்கள் ஐஸ் இடப்பட்டு உடனடியாகவே கொழும்பிற்கு அனுப்பப்பட்டன. இதனால் மீனவர்கள் பெருமளவு வருமானத்தைப் பெற்றனர்.

ஆனால், தற்போது யுத்த அனர்த்தங்களுக்குப் பின், இப்பிரதேசத்தில் தொழிலில் ஈடுபடுகின்ற கடற்தொழில் கலங்களின் விபரங்கள்:

இயந்திரமாக்கப்பட்ட வள்ளம் (F.G.B) - 30
கட்டுமரம் - 10
வள்ளம் - 240

பொதுவாக, வேலணைக் கடற்தொழில் பரிசோதகர் பிரிவில் பெருமளவு கடலட்டை பிடிக்கப்படுகின்றது. கடலட்டையானது யாழ்ப்பாணத்தவர்களின் உணவில் சேர்க்கப்படுவதில்லை. மாறாக, ஏற்றுமதியில் கணிசமானதோர் வருவாயைப் பெற்றுத்தருவதில் இதற்குப் பெரும்பங்கு உள்ளது. கடலட்டையானது, பொதுவாக சற்று சேற்றுக் கடல் பகுதியிலேயே அதிகம் பெருகக்கூடியது. எனவே, வேலணையில் - துறையூர், செட்டிப்புலம் போன்ற பகுதிகளில் கடலட்டை பெருமளவு பிடிக்கப்படுகிறது. மீனவர்கள் சுழியோடி, கடலின் நிலமட்டத்திற்குச் சென்றே இக்கடலட்டைகளைச் சேகரிக்கின்றனர். இது ஒரு கஷ்டமான தொழில் நடவடிக்கையாகும். பின், இக்கடலட்டைகள் வெளியிலே காய விடப்பட்டு, பதப்படுத்தப்பட்ட நிலையிலேயே விற்பனைக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன.

மேலும் இப்பிரதேசத்தில் - பாரை, விளை, கணவாய், நண்டு, இறால் போன்றவை பெருமளவு பிடிக்கப்படுகின்றன. சராசரியாக 18,000 Kg மீன் வேலணைப் பிரதேசத்தில் மாதாந்தம் பிடிக்கப்படுகின்றது.

ஒரே பார்வையில் வேலணைக் கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள் வாழும் மீனவக் குடும்பங்களின் விபரங்கள் வருமாறு:

| மீன்பிடிக் கிராமம் | மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை | மீனவத் தொழிலாளர்கள் | குடித் தொகை |
|---|---|---|---|
| 1) மண்டைதீவு | 82 | 80 | 327 |
| 2) அல்லைப்பிட்டி | 116 | 112 | 496 |
| 3) செட்டிப்புலம் | 106 | 114 | 411 |
| 4) துறையூர் | 298 | 304 | 1185 |
| 5) வேலணை மேற்கு | 107 | 114 | 405 |
| 6) புங்குடுதீவு கிழக்கு | 76 | 84 | 272 |
| 7) புங்குடுதீவு மத்தி | 93 | 101 | 378 |
| 8) புங்குடுதீவு மேற்கு | 72 | 64 | 272 |
| மொத்தம் | 950 | 973 | 3746 |

இப்பிரதேசத்திலுள்ள கடற்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக மொத்தமாக 8 கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவை ஒவ்வொரு மீன்பிடிக்கிராமத்தையும் மையமாகக் கொண்டு தொழிற்பட்டுவருகின்றன. இதில் கடற்தொழிலாளர்கள் எல்லோரும் அங்கத்தவர்களாக உள்ளனர். அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் எல்லாம் தமது உதவிகளை இச்சங்கங்களின் மூலமாகவே கடற்தொழிலாளர்களுக்கு வழங்கி வருகின்றன. முன்னுதாரணமாக துறையூர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தொழிற்பாட்டில் முன்னணியில் இயங்குகின்ற ஒரு சங்கமாகும். இது தனது எல்லைக்குட்பட்ட மீனவர்களுக்கு பல்வேறு வழிகளில் உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை, மேற்படி பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். எவ்வாறு அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து, அபிவிருத்தியை மேற்கொள்ளலாம் என ஆராய்வோம்.




### சுத்தமான குடிநீர்

இப்பிரதேசத்தில் குடிக்கும்நீர் கொண்ட கிணறுகள் மிகக்குறைவு. குழாய்நீர் மூலமே, தமது குடிநீரைப் பெறுகின்றனர். குழாய்நீரானது எந்நேரமும் கிடைக்காது. இதற்கு நேரவரையறை உண்டு. இதனால் தூர இடங்களில் இருக்கும் மக்கள் - பானைகள், கான்களைக் கொண்டு வந்து குழாய்நீர் பெறுவதற்காக காத்திருக்க வேண்டிய தேவையுள்ளது. இதனால் நேர விரயத்தினைத் தவிர்க்க முடியாது உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்றும்

### கல்வி

இங்கு கல்விநிலை பின்தங்கிய ஒன்றாகவே காணப்படுகின்றது. ஏனெனில், ஒவ்வொரு குடும்பத்திலும் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் வறுமை தவிர்க்கமுடியாத ஒன்றாகி விடுகின்றது. இதனால் கல்வி நடவடிக்கைகளை பாதியில் நிறுத்திவிட்டு கடற்தொழில் நடவடிக்கைகளில் பிள்ளைகள் ஈடுபடுகின்றனர். இதுவொரு துரதிர்ஷ்டவசமான விடயமாகும்.

### அடிப்படைச் சுகாதார வசதிகள்

பொதுவாக மலசலகூட வசதிகள் இங்கு குறைவாகவே காணப்படுவதால் மழைக்காலங்களில் தொற்றுநோய் பரவும் அபாயங்கள் அதிகரித்துள்ளன.

### தொழில் உபகரணப் பற்றாக்குறை

பொதுவாக வன்செயல்களின்போது இவர்களது தொழில் உபகரணங்கள் முற்றாக சேதமடைந்து விட்டன. தற்போது மீளக் குடியமர்ந்துள்ளோர் தொழில்செய்யும் திறன் இருந்தும் உபகரண வசதியைப் பெற்றுக்கொள்ள பணவசதி இல்லாத காரணத்தினால் நிவாரணத்தை நம்பியிருக்க வேண்டியுள்ளது.

எனவே, இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பாரியளவு முதலீடும் மூலதனமும் தேவைப்படுகின்றது. இதற்குத் தனியே, மீன்பிடித்துறை அமைச்சினையோ அதன் திணைக்களங்களையோ நம்பியிருப்பதில் பிரயோசனம் இல்லை.

வெளிநாட்டு உதவிகள், உதவி வழங்கும் நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் நிதியினை - கடற்தொழில் கூட்டுறவுச்சங்கங்களின் மூலம் மீனவர்களுக்குக் கொடுத்து. அவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதுடன் அவர்களின் சேமிப்புப் பழக்கத்தையும் அதிகரிக்க வேண்டும்.

மற்றும் - அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேற்குறிப்பிட்ட உட்கட்மைப்பு வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் அவசியமானது.

*(அடுத்தவாரம் தொடரும்)*


# தொழில்வங்கி



| நிறுவனம் | ITN சுயாதீன தொலைக்காட்சி. | கெயார் (Care) கிழக்கு மாகாணம். |
|---|---|---|
| வெற்றிடம் | நிகழ்ச்சித் தயாரிப்பாளர் (தமிழ்) | முகாமைத்துவப் பயிற்சியாளர், மதிப்பீட்டு அலுவலர், நுண் நிதியிடல் பயிற்சியாளர், திட்டச் செயலாளர். |
| அடிப்படைத் தகுதி | க.பொ.சா.தரம், அதற்கு மேல் நிகழ்ச்சித் தயாரிப்பில் அனுபவம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவப் பட்டதாரி. |
| விண்ணப்ப முடிவுத் திகதி | 01-01-2003 | 28-12-2002 |

**தொழில் வங்கியில் வரும் விடயங்கள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் "நமது ஈழநாடு" அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.**

# வரலாற்றில் முதன்முறையாக நட்டத்தை சந்தித்துள்ள மெக்டொனால்ஸ் கம்பனி!




மெக்டொனால்ஸ் கம்பனி அதன் வரலாற்றில் முதற்தடவையாக நட்டத்தினைச் சந்தித்துள்ளது. இன்றைய உலகத்தின் வாழ்க்கைக் கோலத்திற்கு ஏற்ப 'அவசர உணவுகளை' (Fast Food) தயாரிக்கும் பல்தேசியக் கம்பனியான மெக்டொனால்ஸ் - கடந்த மூன்று மாத காலமாக 5-6 சதவீத நட்டத்தினை எதிர்கொண்டுள்ளது.

இதனால், மெக்டொனால்ஸ்ஸின் பிரதம நிறைவேற்று இயக்குநர் மத்தியூ போல் இம்மாதம் 5 ஆம் திகதி முதல் கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளார்.

உலகளாவிய ரீதியில் முப்பதாயிரம் உணவு விடுதிகளை வைத்திருக்கும் மெக்டொனால்ஸ், கடந்த மாதம் மட்டும் 175 உணவு விடுதிகளை மூடியுள்ளதுடன், 600 தொழிலாளர்களை வேலையில் இருந்து நீக்கியுள்ளது.

மெக்டொனால்ஸ் நட்டமடைவதற்கான காரணங்களாக - ஊழியர்களின் ஊழல் நடவடிக்கைகள், 'அவசர உணவு'களை மெக்டொனால்ஸ் நிறுவனத்தினை விட குறைந்த உற்பத்திச்செலவில் வேறு நிறுவனங்கள் தரமான 'அவசர உணவு'களைத் தயாரித்துச் சந்தைக்கு விடுவதனாலும், மற்றும் ஐரோப்பாவிலும், ஜப்பானிலும் மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோய் (Mad Cow) ஏற்பட்டதனால் மாட்டு இறைச்சியில் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களின் விற்பனை பெருவீழ்ச்சியைச் சந்தித்தமையும் சுட்டிக்காட்டப்படுகின்றன. மெக்டொனால்ஸ்ஸின் இந்த வீழ்ச்சி, பல்தேசியக் கம்பனிகளுக்கு ஒரு பாடமுமாகும்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | மருதனார்மடம் | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | சங்கானை |
|---|---|---|---|---|---|---|
| வெங்காயம் | 70/- | 60/- | 50/- | 40/- | 60/- | 60/- |
| பச்சை மிளகாய் | 100/- | 60/- | 70/- | 80/- | 80/- | 100/- |
| கத்தரிக்காய் | 80/- | 60/- | 60/- | 80/- | 80/- | 70/- |
| பாகற்காய் | 100/- | * | * | 80/- | * | 100/- |
| வெண்டிக்காய் | 40/- | 40/- | 25/- | 60/- | 40/- | 25/- |
| உருளைக்கிழங்கு | 80/- | 70/- | 80/- | 80/- | 70/- | 70/- |
| பீற்றூட் | 40/- | 40/- | 30/- | 40/- | 30/- | 25/- |
| கரட் | 60/- | 70/- | 50/- | 40/- | 60/- | 50/- |
| பயிற்றை | 80/- | 65/- | 50/- | 80/- | 60/- | 60/- |

# வரவுசெலவுத் திட்டம் — 2003

## வரவுசெலவுத் திட்டம் பகுதி III

இப்பகுதியில் கடந்த சில வாரங்களுக்கு முன் வரவு-செலவுத்திட்டத்தின் துறை ரீதியான பங்களிப்பினைப் பற்றிப் பார்த்தோம். இனி முதலீட்டுக்கான ஊக்கவிப்புத் திட்டங்கள், எந்த வகையில் இவ்வரவு-செலவுத்திட்டத்தில் கையாளப்பட்டுள்ளன என்பதனை அவதானிப்போம்.

2003 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் பிரகாரம் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பல்வேறு வகையான வரிச் சலுகைகளை அனுபவிக்க உள்ளார்கள். அது தொடர்பான விபரங்களை அருகிலுள்ள அட்டவணையானது தருகின்றது. இப்பிரேரணைகள், 2 வலயங்களின் அடிப்படையில் செயற்படுத்தப் படவுள்ளன.

வலயம் - 1, மேற்கு வலயம் - **Western Region**.

வலயம் - 11, ஏனைய வலயங்கள் - **Other Regions**

இவ் வரவு-செலவுத் திட்டத்தில் சமர்ப்பிக் கப்பட்டுள்ள வரிகளின் புதிய விகிதங்கள் மற்றும் பல்வேறு வகையான வரிகளின் வரி விகிதங்களும் அட்டவணையில் காணப்படுகின்றன. இங்கு வருமான வரிகள் என்பவை, ஒருவரது வருமானத்தின் மீது நேரடியாக விதிக்கப்படுபவை ஆகும். தொழிலாளர்களது விசேட வருமானங்களின் மீது நேரடியாக விதிக்கப்படும் வரியானது தொழிலாளர்களது வருமானங்கள் மீதான வரிகளாகக் காணப் படுகின்றன. அடுத்ததாக, தனியார்துறைத் தொழிலாளர்கள் தமது தொழிலிலிருந்து இளைப்பாறும்போது விதிக்கப்படும் வரிகள் தரப்பட்டுள்ளன. அடுத்ததாக, ஏற்படக்கூடிய நட்டங்கள் மீதான வரிகள், எத்தனை வருடங்கள் கொண்டு செல்லமுடியும் என்பது காட்டப் பட்டுள்ளது. அடுத்ததாக, கம்பனிகள் மீதான வரிகள், அவற்றின் பல்வேறுவகைத் தன்மை, அவற்றின் வருமானங்கள் மீது, எவ்வாறான வரி விகிதத்தில் விதிக்கப்படுகின்றன என்பது பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. அடுத்ததாக, எந்த வருமானங்கள் மீது எத்தனை சதவிகித பிடிப்பு வரிகள் அறவிடப்படுகின்றன என்ற விபரங்கள் தரப்பட்டுள்ளன.

**எஸ்.வசந்தகுமார்**

அடுத்ததாக பெறுமதி கூட்டிய வரிகள் தொடர்பான விபரங்கள் தரப்பட்டுள்ளன. இங்கு பெறுமதிகூட்டிய வரி என்பது, ஒவ்வொரு நிறுவனங்களும் தமது உற்பத்திப் பொருட்களுக்குத் தமது நிறுவனங்களின் சார்பில் வழங்கிய காரணிப் பங்களிப்பின் மீதான வரியே பெறுமதிகூட்டிய வரியாகும். அடுத்ததாக, நேரில் வரிகளில் ஒன்றாகிய பற்றுவரி பற்றித் தரப் பட்டுள்ளது. பற்றுவரி என்பது வங்கிக் கணக்குகளில் இருந்து பணத்தினை மீளப் பெறும்போது அவ்மீளப்பெறும் தொகைகளின் மீது விதிக்கப்படும் வரியாகும்.

அடுத்ததாக, நிறுவனங்கள் கொள்வனவு செய்யும் நிலையான சொத்துக்களின் மீது ஏற்படுத்தப்படும் மூலதன விடுதொகைகள் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன.

| கைத்தொழில்களின் வகை | ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய முதலீடு மற்றும் ஏற்றுமதியின் அளவு | வழங்கப்படவுள்ள சலுகைகள் |
|---|---|---|
எவ்வாறிருந்தாலும் - இந்தியாவின் நலன் பேணும் விடயங்கள் தொடர்பாக - 'பூனை கண்ணை மூடிக் கொண்டு பாலைக் குடிப்பதுபோல்' இந்தியா நடந்து கொண்டாலும் - தமிழர்கள் கடந்தகாலப் படிப்பினைகளின் அடிப்படையில் விழிப்பாக இருப்பது அவசியமானதாகும்.

# ஊழல் மலிந்த துறையாக பொலிஸ் திணைக்களம்

(கொழும்பு)

இலங்கையில் ஊழல்கள் மலிந்த அரச நிறுவனமாக பொலிஸ் திணைக்களமே உள்ளதாக நிர்வாக ஊழல்களை விசாரிக்கும் சர்வதேச அமைப்பான 'ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல்' நடாத்திய ஆய்வு ஒன்றிலிருந்து தெரிய வந்துள்ளது.

இலங்கையின் வடக்கு- கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய 7 மாகாணங்களில் 2278 குடும்பங்களிடையே மேற்கொண்ட ஆய்விலிருந்தே, பொலிஸ் திணைக்களம் அதிகமான ஊழல் நிறைந்த அரச திணைக்களமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன்படி, 39.2 சதவீதமானவர்கள் பொலிஸ் திணைக்களத்தையும், 5.2 வீதமானவர்கள் சுகாதாரத் திணைக்களத்தையும், 3.6 சதவீதமானவர்கள் சமுர்த்தி அமைப்பையும் ஊழல் நிறைந்த நிலையங்களாகக் கருதுகின்றனர்.

இதேவேளை, இந்த ஆய்வு தொடர்பாக பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் செய்தியாளா் களிடம் பேசிய ட்ரான்ஸ்பரன்ஸி இன்ரநஷனல் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ஜே.சி.வெலியமுன்ன,

இலங்கையில் பொலிஸ், நிதி ஆகிய துறைகளில் தான் அதிகமான ஊழல் இடம்பெறுவதாக ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளதாகத் தெரிவித்தார். உலகிலுள்ள ஒரே ஒரு ஊழல் ஒழிப்பு அமைப்பான ட்ரான்ஸ்பரன்ஸி இன்ரநஷனல் இலங்கையிலும் செயற்படத் தொடங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

(01)

## வடமராட்சி கிழக்கு விவசாயிகளுக்கு விதை நெல், பசளை விநியோகம்

(வடமராட்சி கிழக்கு)

சர்வோதயம், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு 500 ஏக்கரில் நெல் பயிரிடுவதற்கு தேவையான விதைநெல், பசளை போன்ற உள்ளீடுகளை வழங்கியுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மருதங்கேணி, ஆழியவளை, செம்பியன்பற்று போன்ற கிராமங்களிலுள்ள மீளக் குடியமர்ந்த விவசாயிகளுக்கே 500 ஏக்கரில் நெல் பயிரிடுவதற்கு விதைநெல் பசளை போன்ற உள்ளீடுகளை சர்வோதயம் வழங்கியுள்ளது.

இதேவேளை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு "சேவா லங்கா" நிறுவனம் மண்வெட்டி, கத்தி போன்ற விவசாய உபகரணங்களை வழங்கியுள்ளது.

## இந்தியப் படையதிகாரிகள் குழு கண்காணிப்பு குழுவுடனும் பேசும்

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து ஆராய்வதற்கு கொழும்புக்கு வந்துள்ள இந்திய இராணுவ உயர் மட்டக்குழுவினர், அரசதரப்பினருடன் மட்டுமன்றி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகத் தெரியவருகின்றது.

போர் நிறுத்தம் அமுல் நடத்தப்படுகின்ற முறை குறித்து இவர்கள், கண்காணிப்புக் குழுவினருடன் பல சுற்றுக் கலந்துரையாடல்கள் நடத்தவுள்ளனர்.

ஜெனரல் நம்பியார் தலைமையின் மூன்று உறுப்பினர் உயர்மட்ட இராணுவக் குழு இந்தியாவிலிருந்து கொழும்பு வந்திருப்பது தெரிந்ததே.

# புலிகள் மீது இந்தியத் தலையீட்டைக் கோரும் ஜெயலலிதாவின் நிலைப்பாடு வியப்பளிக்கிறது

### — ம.தி.மு.க. அவைத் தலைவர் எல்.கணேசன் —

(சென்னை)

விடுதலைப்புலிகள் மீது இந்தியத் தலையீட்டை வலியுறுத்தும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் நிலைப்பாடு தமக்கு வியப்பளிப்பதாக ம.தி.மு.க வின் அவைத் தலைவர் எல்.கணேசன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் ம.தி.மு.கவின் கட்சி அலுவலகத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் எல்.கணேசன் உரையாற்றினார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் அரசாங்கமும் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில்கூட ஜெயலலிதா புலிகளை எதிர்ப்பது எதற்காகவென்று புரியவில்லை.

புலிகள் மீது இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு ம.தி.மு.க சரியான நேரத்தில் குரல் எழுப்பும். பொடா சட்டத்தை வை.கோ ஆதரித்ததாகக் கூறுகின்றனர். வை.கோ. பொடாவை முழுமையாக ஆதரிக்கவில்லை. கூட்டணி தர்மத்தின் அடிப்படையில்தான் அவர் ஆதரவு வழங்கினார். வை.கோ வை விடுவிக்கக் கோரும் ஒரு கோடி கையெழுத்துப் பெறும் இயக்கம் நடைபெறுகிறது. இந்தக் கையொப்பங்கள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் நேரடியாகக் கையளிக்கப்படும் என எல்.கணேசன் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.குடாநாட்டுக் கைத்தொழிலாளருக்கு அடிப்படைத் தேவைகள் பெற்றுத் தரப்படும்

### கைத்தொழில் அதிகாரசபைத் தலைவர் உறுதி

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடாநாட்டின் கைத்தொழில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது, இவ்வாறு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் பந்துல பெரேரா தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டின் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வது தொடர்பான பிரச்சனைகளை இனங்கண்டு, அவற்றினை நீக்கி அபிவிருத்தி செய்வதற்காக வருகைதந்த கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர், நேற்று முன்தினம் யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூட்டத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

பிரதேச கைத்தொழில் அபிவிருத்திச்சபைப் பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் மேலும் உரையாற்றியதாவது,

குடாநாட்டில் அமைந்துள்ள கைத்தொழில் அபிவிருத்தி நிலையங்கள அடிப்படை வசதிகள் இன்றி இயங்கிவருகின்றன. இவற்றினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் புதிய நியமனங்கள் வழங்கவும், அலுவலகத்தில் தகவல் தொடர்பை அதிகரித்து குடாநாட்டின் கைத்தொழிலாளர்களின் தேவைகளை நிறைவேற்றவும் உடன்நடவடிக்கை எடுக்கப்படும்.

இங்கு- தமிழ்மொழி நடைமுறையில் இருந்த போதும் ஆங்கில, சிங்கள மொழிகளிலும் படிவங்கள் இருக்கின்றன. அவற்றினை மொழிபெயர்த்து தமிழ் மொழியில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவதற்காக, தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூவரை அடுத்த ஆண்டின் முற்பகுதியில் நியமிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

கைத்தொழில் முயற்சியாளர்கள், புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கவும்- கைத்தொழில் நிறுவனங்களை அபி விருத்தி செய்யவும் தனியார் வங்கிகளில் இருந்து 10 வீத வட்டியுடன் கடன்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்திய அரசின் உதவியுடன் கைத்தொழிலாளர்கள் கடன் அடிப்படையில் வாகனங்களும் பெற்றுக் கொள்ளமுடியும்.

குடாநாட்டில்- திண்மக் கழிவுப் பொருட்களினால் நீர்மாசடைதலை கட்டுப்படுத்த புதிய செயற்திட்டம் வகுக்கப்படும்.

புதிய கைத்தொழிலாளர்களுக்கும், கைத்தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கும்- தொழில் நுட்ப அதிகாரிகளினால் ஆலோசனைகள் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த பொறியியலாளர் திஸ்ஸ டீ சில்வா, திட்டமிடல் பிரிவு பணிப்பாளர் ஜெயதிலக, பயிற்சிநெறிப் பணிப்பாளர் வீரசேன, பிரதேச அபிவிருத்தி பணிப்பாளர் அமரா லியனகே ஆகியோரும் உரையாற்றினர்.

குடாநாட்டிலுள்ள கைத்தொழில் நிலையங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமை தொடர்பாகவும் அவர்கள் ஆராய்ந்தனர். (ச)

## வடமராட்சி கொத்தணி தொழிலாளர் நேற்று முதல் மறியற் போராட்டம்

(நாவற்காடு)

திக்கம் வடிசாலையை மீண்டும் வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் கொத்தணியிடம் ஒப்படைக்கக் கோரி, பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் முன்பாக நேற்று மறியல் போராட்டம் இடம்பெற்றது.

நேற்றையதினம் காலை நான்கு பேருந்துகளில் வந்த சுமார் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் நடத்திய மறியல் போராட்டத்தினால், பனை அபிவிருத்திச் சபையின் பணிகள யாவும் முற்றாகத் தடைப்பட்டன.

நேற்றைய தினம் ஆரம்பித்த இம்மறியல் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (92)

# சமஷ்டியும் சிங்களத் தலைமைகளும் டி.எஸ்.சேனநாயக்கா முதல் ரணில் வரை

அமைதி குலைந்து அழிவுகள் ஏற்பட்டு நாடு சீரழியும்நிலைக்கு வந்த பின்னர்தான் சிங்களத் தலைவர்கள் சிலருக்கும் புத்திஜீவிகள் பலருக்கும் ஞானம் பிறக்கும்போலும்!

முதலாளி- தொழிலாளிப் பிரச்சினை, வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை, அரிசி விலை உயர்வுப் பிரச்சினை தவிர இனங்களுக்கிடையில், சமூகங்களுக்கிடையில் எந்தப் பிரச்சினையும் இலங்கையில் இருந்ததில்லை.

உணவில் தன்னிறைவு, விவசாய அபிவிருத்தி என்ற போர்வையில இலங்கையின் முதல் பிரதமர் டி. எஸ்.சேனநாயக்கா, கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுத்துத் திட்டமிட்டுக் குடியேற்றினார்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்தும், அதனால் தமிழர் தாயகமான வடக்கு- கிழக்கு மாகாணத்துக்கு ஏற்படக்கூடிய ஆபத்துப் பற்றியும் குரல் கொடுத்தபடி செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி 1949 ஆம் ஆண்டில் உதயமானது.

சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்து மேடைகளில் தமிழரசுக் கட்சியினர் முழங்கிய வந்தார்களே தவிர, தமிழ் மக்களை இப்பகுதிகளில் குடியேற்றி விவசாயச் செய்கையில் ஈடுபட வைத்துத் தமிழ்ப்பிரதேசத்தைக் காப்பாற்றுவதற்கு எதுவும் செய்யவில்லை, செய்யும் திறனும அவர்களுக்கிருக்கவில்லை.

டி.எஸ்.சேனநாயக்காவுக்குப் பின் ஐக்கிய தேசியக் கட்சியில் தமக்கு வாதுட உரிமை கிடைக்காது என்பதை உணர்ந்து கொண்ட எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி சிங்கள மகாசபை என்று ஒன்றைத் தொடங்கினார். பின்னர் இது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது.

1952 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி டி.எஸ்.சேனநாயக்கா குதிரையிலிருந்து விழுந்து இறந்து போனார். அவருக்குப்பின் தனக்கே பிரதமர் பதவி கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்த சேர். ஜோன் கொத்தலாவலக்கும் "பெப்பே" காட்டி, கிழவன் சேனநாயக்கா முன்பே சொல்லி வைத்தபடி, சோல்பரி பிரபு- மகன் டட்லியைப் பிரதமராக்கினார்.

1952 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த டட்லி, தனது நிதி அமைச்சராக ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை நியமித்தார். இளைஞரான டட்லி பிரதமரானது- கொத்தலாவலக்கும் மட்டுமல்ல, ஜே.ஆர் போன்றவர்களுக்கும் உள்ளூரக் கடுப்புத்தான்.

1953 ஆம் ஆண்டில் டட்லி அரசின் முதலாவது வரவு செலவுத் திடடத்தில்- இருபத்தைந்து சதமாக இருந்த ஒரு படி அரிசியின் விலையை எழுபத்தைந்து சதமாக நிதியமைச்சர் ஜெயவர்த்தனா உயர்த்தினார். அரிசி விலை உயர்வை எதிர்த்து இடதுசாரிகள் குரல் எழுப்பினர். பண்டாரநாயக்காவும் இடதுசாரிகளுடன் சேர்ந்து உரத்துக் குரல் கொடுத்தது மட்டுமன்றி, போராட்டத்திலும் குதித்தார். வவுனியா சுந்தரலிங்கம் உள்ளிட்ட தமிழ்க்கட்சியினரும் இதில் ஒத்துழைத்தனர்.

அரிசி விலையை எதிர்த்து நாடு முழுவதிலும் கடையடைப்பும், ஹர்த்தாலும் நடந்தது. அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஊரடங்குச் சட்டமும் பல இடங்களிலும் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆர்ப்பாட்டங்களைக் கலைக்கவும், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும்- பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகங்கள் இரண்டொரு இடங்களில் நிகழ்ந்தன. இரண்டு, மூன்று பேர் இவற்றில் மாண்டனர். இதில் பிரதமர் அலுவலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரியான பெரியதம்பி என்பவர் அலுவலகத்திலிருந்து வீடு திரும்புகையில் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் பலியானார். இது டட்லிக்குப் பெரும் கவலையைக் கொடுத்தது. இரண்டு, மூன்று தினங்கள் கடும் ஆலோசனையின் பின் டட்லி பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்து, அரசியலிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கினார். சேர். ஜோன் கொத்தலாவல பிரதமரானார்.

அரிசி விலையை எதிர்த்து இடதுசாரிகளுடனும் மற்றும் அரசியல் கட்சிகளுடனும் சேர்ந்து நடத்திய அரசுக்கெதிரான கிளர்ச்சி வெற்றி பெற்றதால்- பண்டாரநாயக்கா ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்குப் புதிய உற்சாகத்தையும் புதிய சிந்தனையையும் தோற்றுவித்தது.

சிங்களம் மட்டுமே நாட்டின் உத்தியோகமொழியாக வரவேண்டும் என்று பண்டாரநாயக்கா குரல் கொடுத்தார். இதற்குப் பேரினவாதப் பத்திரிகைகளும், பேரினவாதிகளும்


டி.எஸ். சேனநாயக்கா


டட்லி


கொத்தலாவல

சாதகமாக ஒத்தூதினர். சிங்களம் மட்டும் அரச கருமமொழி என்ற கோஷத்துக்கு, பௌத்த மதபீடங்களும் பௌத்த பிக்குகள் பலரும் உற்சாகமாக வரவேற்றதைத் தொடர்ந்து- பண்டாரநாயக்கா தாம் ஆட்சிக்கு வந்தால் இருபத்திநான்கு மணிநேரத்தில் சிங்களம் ஆட்சி மொழியாகும் என்று பிரகடனப்படுத்தினார்.


தந்தை செல்வா

தமிழ்க் காங்கிரஸ் மற்றும் தமிழ்க் கட்சிகளும் இடதுசாரிக் கட்சிகளும் நாடு முழுவதிலும் சிங்களத்

## எஸ்.எம்.ஜி

துடன் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தன. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, சமஷ்டி அமைப்புக் கோரிக்கையுடன் சம அந்தஸ்தும் கேட்டது. பண்டாரநாயக்காவுடன் முன்னைய இடதுசாரிகளான பிலிப் குணவர்த்தனா, டாக்டர் டபிள்யு.தகநாயக்க போன்றோரும் ஐ.எம்.ஆர்.ஏ இரியகொல, கே.எம்.பி.ராஜரத்தின போன்றோரும் இணைந்து சிங்களத்தை அரியணையேற்ற சபதமேற்றனர். எங்கும் தமிழ்மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான துவேஷப் பிரசாரம், தேர்தல் கூட்டங்கள் ஆரம்பமாவதற்கு முன்னரே தொடங்கியிருந்தது.

இச்சமயத்தில் யாழ்ப்பாணத்துக்குச் சென்ற பிரதமர் சேர்.ஜோன்- அங்கு தமக்குக் கிடைத்த வரவேற்பில் மயங்கி, ஐக்கிய தேசியக்கட்சியின் பழைய கொள்கையின்படி சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படும் என்று கொக்குவிலில் நடந்த கூட்டத்தில் உறுதியளித்தார்.

சேர். ஜோன் - 'சம அந்தஸ்து' என்று கூறியது பண்டாரநாயகாவின் பிரசாரத்துக்கு நல்லவாய்ப்பாகப் போகிறது என்று யு.என்.பியினர் துடித்தனர். சேர்.ஜோன்- கொழும்பு திரும்பியதும் இவர்கள் அவரை மடக்கினர். 'தாம் சம அந்தஸ்து என்று சொல்லவே இல்லை' என்று சேர். ஜோன் கொழும்பிலிருந்து மறுப்பறிக்கை வெளியிட்டார்.

இதன்பின் களனி மாநாட்டில் ஐக்கிய தேசியக்கட்சி சிங்களம் மட்டுமே தனது மொழிக் கொள்கை என்று தீர்மானம் நிறைவேற்றிய போதிலும், பேரினவாதிகளுடன் சேர்ந்து பண்டாரநாயக்கா அமைத்த 'மகாஜன எக்சத் பெரமுன' (மக்கள் ஐக்கிய முன்னணி) தேர்தலில் அமோக வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தது. ஐக்கிய தேசியக்கட்சி எட்டேயெட்டு "ஆசனங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. சேர்.ஜோன், தமது தொகுதியான தொடங்கஸ்லந்தையில் வெற்றிபெற்றாலும் அதன் பின் நாடாளுமன்றத்துக்கு வரவேயில்லை.

1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சிங்களத்தை இருபத்திநான்கு மணிநேரத்தில் அரசகருமமொழியாக்குவதற்கு வாக்குறுதியளித்து பெரும்பான்மைச் சிங்களச் சமூகத்தின் பெரும்பான்மையான வாக்குகள் பெற்று, பண்டாரநாயக்கா ஜனநாயக முறையில் ஆட்சிக்கு வந்தார். இதேசமயம், நாடு முழுவதிலும் சிங்களத்துடன்- தமிழுக்கு சமஅந்தஸ்து வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழ்க காங்கிரஸ் கட்சித்தலைவர் ஜிஜி.பொன்னம்பலம் யாழ்ப்பாணத்திலும், 'அடங்காத்தமிழன்' செ.சுந்தரலிங்கம் வவுனியாத் தொகுதியிலும் வெற்றியீட்ட, வடக்கு இதர அனைத்துத் தொகுதிகளிலும் செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியினர் ஜனநாயக முறையில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்கள்.

சிங்களத்தை உத்தியோக மொழியாக்குவேன் என்று பண்டாரநாயகா தேர்தலில் பிரசாரம் செய்த அதே நேரம், சிங்களம் மட்டும் மசோதாவை எதிர்த்து நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஜனநாயக முறையில், காந்தீய வழியில், சாத்வீகமாக எதிர்த்துப் போராடுவோம் என்றும் செல்வநாயகமும் தமிழ் கட்சியினரும் தேர்தல் பிரசாரத்தில் அறிவித்து வாக்குறுதியளித்தனர்.

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் திகதி நாடாளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதாவை பிரதமர் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயகா சமர்ப்பிப்பார் என்று அறிவிக்கப்பட்டது. இதே சமயம் தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், பிரதம மந்திரிக்கும் நாடாளுமன்ற சபாநாயகர், சபைலிகிதர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் ஒரு கடிதம் அனுப்பினார். ஜூன ஐந்தாம் திகதி- சிங்களம் மட்டும் மசோதா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நானும், எமது சககட்சி எம்.பிக்களும், இருநூறு கட்சித் தொண்டர்களுடன் நாடாளுமன்றப் படிக்கட்டுக்களில் அதிதியாக அமர்ந்து உணவுண்ணாமல் நாடாளுமன்றத்தின் அன்றைய கூட்டம் முடியும்வரையில் இருப்போம் என்று கடிதத்தில் அறிவித்திருந்தார். இதன்படி ஜூன் ஐந்தாம் திகதி காலை செல்வநாயகமும் எம்.பிக்களும் தொண்டர்களும் காலிமுகத்திடலை நோக்கி "கோல்பேஸ் ஹோட்டல்" பக்கமாகப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தனர். தமிழரசுக் கட்சியினர் செல்வநாயகம் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தின் படிக்கட்டுக்களில் உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்களென்பதை, செல்வநாயகமும் சமஷ்டிக்கட்சியினரும் நாடாளுமன்றத்தை உடைக்க வருகிறார்களென்று சில சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் ஒருசில அரசியல்வாதிகளின் கூற்றாகச் செய்திகள் வெளியிட்டிருந்தன.

இதன் விளைவு சத்தியாக்கிரகம் செய்யச்சென்ற தமிழரசுக் கட்சியினர் காடையர்களால் காலிமுகத்திடலில் தாக்கப்பட்டு மண்டை உடைபட்டனர். பலர் காயமடைந்தனர்.

இதுதான் சமஷ்டிக் கோரிக்கைக்கும் சம அந்தஸ்துக் கோரிக்கைக்கும் கிடைத்த முதல் பதில். ஜனநாய முறையிலும், காந்தீய வழியில், சாத்வீக ரீதியிலும் மேற்க்கொள்ளப்பட்ட வாதாட்டத்துக்கும் போராட்டத்துக்கும் சிங்களப் பேரினவாதிகளும், சிங்களப் புத்திஜீவிகளும், சிங்கள அரசியல் தலைவர்களும் கொடுத்த மதிப்பும் அர்த்தமும் இந்தத் தாக்குதலாகும்.

(அடுத்த வாரம் தொடரும்)

## எங்கே போகிறோம்...?

நேசன்

### எமது பெண்களின் கௌரவம்

நமது நாட்டில் ,நமது சமூகத்தில்~ அரசியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக ஏற்பட்டு வருகிற மாறுதல்கள் மக்களிடத்தில் ஒரு நம்பிக்கையை, எதிர்பார்ப்பை உருவாக்குகின்றன. நிம்மதியான வாழ்வு, பிரகாசமான எதிர்காலம் பற்றிய கனவுகள், கற்பனைகள் உருவாகின்றன. முன்போலல்லாத முற்றிலும் புதிதான ஒரு சுபீட்ச வாழ்வின் வருகைக்காக மனவாசல்கள் ஒவ்வொன்றிலுமே புதிய கோலங்கள்...

அவ்வாறான வாழ்வை எதிர்பார்க்கும் நமக்கு, அத்தகைய வாழ்வைப் பக்குவமாய்க் காக்கும் கடமையும் உண்டு என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது. அத்தகைய கடமையும் பொறுப்பும் ஒவ்வொரு ஆண்மகன் கையிலும், ஒவ்வொரு பெண்ணின் கையிலும் இருக்கிறது.

பொதுவாக நமது சமூகத்தில் பொறுப்பு, கடமை, சுமை என்றெல்லாம் வருகிறபோது நமது ஆண் மக்களையே அந்தச் சுமைகளைத் தாங்குவோராய்க் கருதுவது எமது மரபு சார்ந்த பண்பாயிருக்கிறது.

ஆனால் இன்றைய நாள் ~ இன்றைய காலம் அவ்வாறானதாயில்லை.

அது பெண்களின் உரிமைகள் இவையிவை என்றும், கடமைகள் இவையிவை என்றும், பொறுப்புகள் இவையிவை என்றும், பங்குகள் இன்னவையென்றும் வகுத்து வைத்திருக்கிறது.

மரபு வழியில் நாம் வகுத்து வைத்திருக்கும் வரம்புகள், வரன் முறைகளைத் தாண்டி எமது மண்ணின் பெண் மகள் தனது ஆளுமையின் எல்லைகளை உணரப்பெற்றவளாக தலக்குரிய தளத்தப் முழு வீச்சோடு தொழிற்பட அனுமதிக்கப்பட்டிருக்கிறாள் ~ அவளை ஒரு இரண்டாம் தரப்பிரஜையாகக் கொள்கின்ற கருத்துலக வரம்புகள் எமது பெண்ணின் ஒளி மிகுந்த பார்வையில் அர்த்தமிழந்து வருகின்றன.

ஒரு குடும்பம் என்ற கட்டமைப்புக்குள் தாயாய், மனைவியாய், மகளாய் தனது கடமையை ஆற்றி வந்த அவள், எமது மண்ணில் எமது தாயகத்தின் புத்திரியாய்க் கடமையேற்று வீர மூச்சோடு தனது பணியை நிறைவேற்றியிருக்கிறாள்.

மென்மைக்கும், தெய்வீகப் பண்புகளுக்கும், சாந்தத்துக்கும் உரியவள் என வரம்பமைக்கப் பெற்ற அவள், கடமையுணர்வும் கௌரவமும் மிக்கவளாய்த் தேச மீட்புப் பணியில் ஈடுபட்டிருக்கிறாள்.

மரியாதைக்குரியவளாய்த் தன்னை இனங்காட்டி அவள் தலைநிமிர்ந்து நிற்கிறாள்.

வரலாறு இந்த உண்மைகளை எமது கண் முன் விரித்துப் போட்டிருக்கிறது.

இந்த நிலையில் எமது இன்றைய பெண் பிள்ளைகள் தாம் யாரென உணராதவர்களாய் மரபு வழி வரம்புகளுக்கும் உட்படாமல் நவீன பார்வைக்கான தெளிவையும் பெறாமல் தம்மை வெறும் அலங்காரப் பொம்மைகளாகக் கருதிக்கொள்ளும் நிலை இருந்துவருகிறது என்ற உண்மை மனசை உறுத்துகிறது.

பட்டிக்காட்டுத்தனத்தை அவர்கள் வெறுக்கிறார்கள் ~ கட்டுப் பெட்டித்தனமாய் வாழ்வதற்கு அவர்கள் தயாரில்லை. ஆம்! இது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் பட்டிக்காட்டுத்தனத்தை உதறிவிட்டு அவர்கள் தழுவிக்கொள்ளுகிற நவீனத்துவம் எது வரை போகிறது என்பதை உணரவேண்டும்.

கருத்தளவில் அறிவியல் தளத்தில் இவர்களின் போக்குகள் நியாயமானவையாக இருந்தால் அதை ஒரு வளர்ச்சிப் போக்கென அங்கீகரிக்க முடியும்~ அவ்வாறன்றி வெறும் புறத்தோற்றப் புதுமைகளாக அவர்கள் தங்களைக் கருதிக்கொள்கிறார்களெனில் அது வரவேற்கத்தக்கதல்ல. இவர்களெல்லாம் அடிப்படையில் பெண்ணடிமைத்தனப் பாவைகளுக்குள்ளேயே நவீன கோலத்திலும் அடங்குகிறார்களெனில் இவர்களால் இவர்களுக்கே லாபமேதுமில்லை. தமது தோற்றம் ~ தமது அழகு தான் தமது பெருமிதத்துக்குக் காரணம் என்று கூறிக்கொள்கிறபோதே பெண்களின் உண்மையான கௌரவத்தை இவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை என்பதும் தெளிவாகிறது.

வெறும் புறத்தோற்ற அழகு பற்றி அக்கறைப்பட்டு பெருமை பேசி அதே சிந்தனையோடே வாழ்கின்ற காலம் இனியும் தொடர வேண்டுமா? ~ பெண் என்பவள் சமூகத்தில் ஒரு பண்டம் போல கருதப்பட்டது ஒரு காலம். அறிவுலகம் ஆச்சரியமிகுந்த வகையில் வளர்ச்சி கொண்டுவிட்ட இந்தக் காலத்தில் ஆண் போலவே பெண்ணும் சகல துறைகளிலும் திறன்காட்டி உழைத்துத் தனது தனித்துவத்தை நிறுவிக் கொள்ள முடியும் என்னும் உண்மை நிரூபிக்கப்பட்ட பிறகு கூட, பெண்கள் தம்மை வெறும் அலங்காரப் பூக்ஷிதைகளாகக் காட்டிக்கொள்வது சிறுபிள்ளைத்தனமாக அல்லவா இருக்கிறது.

இந்த நிலையில் ~ பெண்களுக்கு உரிய கௌரவம் வழங்கப்படுவதில்லை. அவமதிப்பும், துஷ்பிரயோகமும் பெண்கள் விஷயத்தில் அதிகரித்துவிட்டதென்று குற்றம்சாட்டுவதும் பரவலாக இடம்பெற்று வருகிறது. அறிவியல் முதலான பல துறைகளிலும் தமது திறமைகளை நிரூபிப்பவர்களாகத் தம்மைப் பெண்கள் தரமுயர்த்திக் கொள்வார்களெனில் நிலைமைகள் நிச்சயம் மாறிவிடும்.

விளம்பரங்களில் பெண்களைக் கருவிகளாக உபயோகிக்கும் போக்கு இன்றெல்லாம் பரவலாக சகஜமாகப் போய்விட்டது ~ ஷம்பூ விளம்பரமும் சவர்க்கார விற்பனையும் பெண்கள் இல்லாவிட்டால் வீழ்ச்சிகண்டு விடுமோ என்று உற்பத்தியாளர்கள் அஞ்சுகி றார்கள். உபயோகிப்பவர்கள் பெண்கள் என்பதால் ~ அதிகம் பயன்படுத்துபவர்கள் பெண்கள் என்பதால் ஷம்பூ பெண்களை நம்பி உற்பத்தி செய்யப்படுவதாகச் சொல்லலாம். ஆனால் சலவைத் தூளும் தலைவலி மருந்தும் கூடப் பெண்களையே பயன்படுத்தி விளம்பரம் செய்யப்பட வேண்டுமா? ~ மறைமுகமாக ஒரு அவமதிப்புக்குரிய உள்ளர்த்தம் இத்தகைய காரியங்களில் ~ விளம்பரங்களில் இருப்பதை ஏன் நாம் புரிந்து கொள்ளவில்லை? பெண்ணின் கவர்ச்சி ~ பெண்களின் விஷயத்தில் இருக்கிற ஈர்ப்புத் தன்மை தவறாக உபயோகிக்கப்படுகிறது என்பதைப் பெண்களே புரிந்துகொள்ளத் தவறுவது மிகவும் துயரகரமானது அல்லவா?

இத்தகைய பார்வைதான் பெண்ணின் கௌரவத்துக்கு இழுக்கைத் தேடித் தருகிறது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

விளம்பரங்கள் மட்டுமல்ல இன்றைய வியாபாரச் சினிமாவும் மிகத் தாராளமாகப் பெண்களின் கௌரவத்தைச் சிதைக்கும் செயலைச் செய்கின்றது.

பாலியல் விடயங்களை மலினமான பார்வையோடு அணுகி ரசிகர்களின் வரவேற்பைக் காரணம் காட்டித் தயார் செய்யப்படும் இந்தச் சினிமாக்கள் புரியும் சீரழிவுகள் பலவற்றில் பெண்களின் கௌரவத்தைச் சிதைப்பதும், பெண்கள் பற்றிய மலினமான பார்வையை இளைய சமுதாயத்தினிடையில் பரப்புவதும் நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது~ இதைப் பெண்களே வரவேற்பதுதான் மிகவும் வேடிக்கையான விஷயம்.

பாலியல் சார்ந்த ஒழுக்கச் சிதைவுகள் பலவற்றுக்கும் காரணமாக அமைவது, பெண் ஒரு கவர்ச்சிப் பண்டமாகக் காட்டிக் கொள்ளப்படுவதுதான் என்ற ஞானம் எப்போது ஏற்படப் போகிறது?

எங்கே போகின்றோம் நாம்....?

# ஏவுகணைகள் எதிர்ப்புத் திட்டம் உடன் அமுல்படுத்த புஷ் உத்தரவு

(நியூயோர்க்)

அமெரிக்காவைப் பாதுகாப்பதற்காக கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை எதிர்ப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக ஏற்படுத்துமாறு - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ். டபிள்யூ.புஷ் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர், பசுபிக் சமுத்திரத்தில் அமெரிக்கா நடாத்திய ஏவுகணை எதிர்ப்புப்பரிசோதனை தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, புஷ் இந்த உத்தரவை எழுத்து மூலமாகப் பிறப்பித்துள்ளார்.

இதற்காக - பிரிட்டன், டென்மார்க் ஆகிய நாடுகளின் தளவசதிகளைப் பயன்படுத்துமாறும் ஜோர்ஜ் புஷ் கேட்டுள்ளார்.

ஈரான், ஈராக் மற்றும் வட கொரியா ஆகிய நாடுகளின் ஏவுகணை அச்சுறுத்தலைத் தவிர்ப்பதற்கே, புஷ் இத்திடீர் அறிவிப்பை விடுத்ததாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.


ஏவுகணை எதிர்ப்புப் பரிசோதனையின் போது

தாக்கவரும் ஏவுகணைகளை எதிர்த்து, இடைமறிக்கும் (Interceptors) ஏவுகணைகளை தரை, கடல் வழியே நிறுவுவதோடு வான் வழியே மிகப்பலமான கண்காணிப்பும் மேற்கொள்ளப்படும் எனவும் ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

## ஐ.நா அமைப்புகளை சீனாவுக்குள் வர அனுமதி

(பெய்ஜிங்)

சித்திரவதை மற்றும் மதச் சுதந்திரத்திற்கான ஐ.நா. அமைப்புக்களை சீனாவுக்குள் இனிமேல் அனுமதிக்கப்போவதாக அந் நாட்டு அரசு அறிவித்துள்ளது.

உத்தியோகபூர்வமாக இந்த அறிவித்தலை விடுக்காவிட்டாலும், அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை முடிவில் இந்த உடன்பாடு எட்டப்பட்டதாகவும் , பேச்சுக்கள் சுமுகமாக நடந்ததாகவும் சீனப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருந்தார். இப்பேச்சுகளின்போது, சீனச் சிறைகளில் உள்ள 298 கைதிகளின் விபரங்களை அமெரிக்கா கையளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உலகவலம்

## செய்திப் படங்கள்


வளைகுடாவில் நிலைகொண்டுள்ள பிரிட்டிஷ்.எச்.எம்.எஸ்.காடிவ் போர் கப்பலில் கடற்படையினர் மேற்கொள்ளும் தாக்குதல் பயிற்சி.


நப்லஸ் நகரில் இஸ்ரேலிய டாங்கி மீது கல்லெறிந்து தமது எதிர்ப்பைக் காட்டும் பலஸ்தீன இளைஞர்கள்.


தனது செல்ல நாய் 'பார்னி' யுடன் ஓய்வு நேரத்தைக் கழிக்கும் அமெரிக்க ஜனாதிபதி புஷ்.

# செச்னியப் போராளித் தளபதி ரஷ்யாவின் சிறையில் மரணம்

(மொஸ்கோ)

செச்னியப் போராளிகளின் பிரபலமான தளபதி சல்மான் ரட்யேவ் (35) ரஷ்யாவில் உள்ள ஒரு சிறையில் மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு டிசம்பரில் ரஷ்யப்படையினரால் கைதான இவர் ஆயுட்காலச் சிறைத்தண்டனையைப் பெற்றிருந்தார்.

உள்ளக இரத்தப்பெருக்கே இவரின் மரணத்துக்குக் காரணம் எனச் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். இரகசியமாக இவர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற செச்னியப் போராளிகளின் குற்றச்சாட்டுக்களை ரஷ்ய அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

செச்னியப் போராளிகளுக்கு எதிரான ரஷ்யப்படைகளின் நடவடிக்கைகளில் ரட்யேவின் கைது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது.


மரணமடைந்த தளபதி சல்மான் ரட்யேவ்

# மூழ்கிய கப்பலை மீட்க நடவடிக்கை ஆரம்பம்

(லண்டன்)

கடந்த சனியன்று ஆங்கிலக் கால்வாயில் 3000 ஆடம்பரக் கார்களுடன் நீரில் மூழ்கிய ட்ரைகலர் என்ற கப்பலில் இருந்து, இரண்டாயிரம் தொன் எரிபொருள் அகற்றும் பணி ஆரம்பித்துள்ளது. கடல் போக்குவரத்து மிகவும் அதிகமாகவுள்ள இப்பகுதியில், கப்பல் மூழ்கியிருப்பதால் அப்பகுதியிலிருந்து மூழ்கிய தனது கப்பலை அகற்ற, நோர்வே கப்பல் உரிமையாளர்கள், கடும் பனிப்புகாரின் மத்தியில் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

கப்பல் மூழ்கிய கடல் பகுதியில் அடையாளம் காட்டவென மின்விளக்குகள் மிதக்கவிடப்பட்டுள்ளன. கப்பலுடன் மூழ்கிய கார்களின் பெறுமதி 30 மில்லியன் பவுண்ஸ் எனவும் கப்பலின் பெறுமதி 25 மில்லியன் பவுண்ஸ் எனவும் தெரிவிக்கப்படுகிறது.


மூழ்கிய கப்பலின் ஒரு பகுதி நீருக்கு வெளியே.

# ஐவரிக்கோஸ்டில் கடும்போர் வெடித்தது ஆபிரிக்க தலைவர்கள் அவசரக்கூட்டம்

ஆபிரிக்க நாடான ஐவரிக்கோஸ்ட்டில் அரசாங்கத்துக்கும் போராளிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் யுத்தம் தீவிரமடைந்து வருவதால், அங்குள்ள நிலவரம் பற்றி ஆராய, மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் அவசரக் கூட்டமொன்றைக் கூட்டியுள்ளனர்.

ஐவரிக்கோஸ்ட்டின் வடபகுதியைப் போராளிகள் தற்போது தங்கள் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துள்ளனர்.

இதேவேளை - ஐவரிக்கோஸ்ட்டின் மேற்குப்பகுதியில் அமைதியை நிலைநாட்டுவதற்காக வந்து சேர்ந்துள்ள 2500 பிரெஞ்சுப் படையினரும் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர்.

ஆனால், வடபகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள போராளிகள் பிரெஞ்சுப் படையினர் தமது பகுதிக்குள் நுழையக் கூடாதென உறுதிபட அறிவித்துள்ளனர்.



வடக்கு ஐவரிக்கோஸ்ட்டில் காவல் கடமையில் ஈடுபட்டுள்ள போராளி .

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் செல்வம் மிகுந்த நாடெனக் கருதப்படும் ஐவரிக்கோஸ்ட், உலகின் 'கொக்கோ' உற்பத்தியில் முதலிடத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. மேற்கு ஆபிரிக்காவைத் தனது காலனிக்குரிய பிரதேசமாக வைத்திருந்த பிரான்ஸ் தற்போது அமைதி ப்பணி என்னும் பெயரில் ஐவரிக்கோஸ்டுக்கு மீண்டும் வந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரெஞ்சுத்துருப்புக்களின் பிரசன்னம் பற்றிக் கருத்துத் தெரிவித்த போராளிகள் குழுவான ஐவரிக்கோஸ்ட் நாட்டுப்பற்றாளர் இயக்கத்தின் பேச்சாளர் கைலோமெ சோரே - பிரெஞ்சுப்படைகள் அமைதி காக்கவென வந்துவிட்டுத் தற்போது, தம்மிடமுள்ள ஆயுதங்களைக் களையுமாறு அழுத்தந்திருவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.


நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நெதலார்ந்து திருப்பியனுப்பியோர் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்

(கொழும்பு)

எவ்வித ஆவணங்களும் இல்லாது, சட்டபூர்வமற்ற முறையில் நெதர்லாந்தில் புகலிடம் கோரிய 45 இலங்கையரை, நெதர்லாந்து அரசாங்கம் நேற்று திருப்பியனுப்பியுள்ளது. இவர்களில பத்துப் பெண்களும் ஒரு சிறுவனும் அடங்குவர்.

திருப்பி அனுப்பப்பட்ட இலங்கையர்களுக்கு- அவசர பயண ஏற்பாடுகளை நெதர்லாந்து அரசாங்கம் மேற்கொண்டதுடன் , நெதர்லாந்து அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம்- கட்டுநாயக்க விமான நிலையத்தில் எவ்வித தொந்தரவுகளுமில்லாமல், நாடு திருப்பியனுப்பப்பட்டோர் உடனடியாக அவர்களுக்குரிய இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். (01)



உமையாள்புரத்திற்கு அண்மையில் உள்ள மதகொன்று வெள்ளத்தால் அள்ளுண்டதால், நேற்று முழுவதும் தடைப்பட்டிருந்த ஏ-9 வீதியுடான போக்குவரத்து, நேற்றிரவு மதகு மீள அமைக்கப்பட்டத்தைத் தொடர்ந்து மீண்டும் ஆரம்பித்தது. நேற்று நள்ளிரவு முதல், கிளிநொச்சியில் தரித்து நின்ற மக்கள் யாழ்ப்பாணம் வரத்தொடங்கினர். முகமாலையூடாக வந்த மக்கள், வீடுகளுக்குச் செல்ல போக்குவரத்து வசதியின்றி, யாழ். பஸ் நிலையத்தில் இரவைக் கழித்த காட்சி இது.

## வலி.தெற்கு பொது அமைப்புக்களினன் ஒன்றியக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில், ஒன்றியத்தலைவர் சி.குமாரவேல் தலைமையில் நடைபெறும்.

# கத்திகுத்துக்கு இலக்காகி குருநகர் வாசி மரணம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் நிகழ்ந்த வாக்குவாதம் கத்திக்குத்தில் முடிவடைந்த சம்பவம் நேற்று மாலை, யாழ்.கொய்யாத்தோட்டத்தில் நடைபெற்றது. மேற்படி சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த வபிதாஸ் (வயது 42) என்ற குடும்பஸ்தர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

# அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல சனியன்று யாழ். வருகின்றார்

(யாழ்ப்பாணம்)

பெருந்தோட்ட அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல சனிக்கிழமை யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரும் பெருந்தோட்ட அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்லவுடன், தென்னைப் பயிர்ச் செய்கைச்சபையின் தலைவர் லிங்கன் பெர்ணான்டோவும் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணம் வரும் அமைச்சா- சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இலவச தென்னங்கன்று விநியோக நிகழ்விலும்,

தென்னை உரமானிய கொடுப்பனவுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அதற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்விலும் கலந்து கொள்வார்.

(லி)

# கிழக்கில் குளங்களைத் திறந்ததே பெருவெள்ளத்துக்குக் காரணம்

(அம்பாறை)

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பதினொரு பிரதேச செயலக பிரிவுகளினுள்ளும்- 77,899 குடும்பங்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்திலே ஏற்பட்ட வெள்ளப்பெருக்கிற்கு- உன்னிச்சைக்குளம், வாகனேரிக்குளம் ஆகியன திறந்து விடப்பட்டமையே காரணம் எனக் கூறப்படுகின்றது. இதேவேளை - வடிகால் அமைப்பு மிகமோசமான நிலையில் காணப்பட்டதும் வெள்ளப் பெருக்குக்குக் காரணம் எனத் தெரியவருகின்றது.

போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவிலுள்ள ஆனைகட்டி வெளிப்பகுதியில் 180 குடும்பங்கள் வெள்ளத்துக்குள் அகப்பட்டுள்ளன. அவர்களை மீட்கும் பணி தொடா ந்து நடைபெற்று வருகின்றது.

திருகோணமலையில்- 11,500 குடும்பங்களும், அம்பாறையில் - 13,500 குடும்பங்களும் வெள்ளத்தால் இடம்பெயர்ந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் 1500 குடும்பங்களும், கல்முனைப் பிரதேச செயலகபிரிவில் 1000 குடும்பத்தினரும், அட்டாளைச் சேனை பிரதேச செயலக பிரிவில் 4500 குடும்பங்களும், சிராங்கேணி பிரதேச செயலக பிரிவில் 250 குடும்பங்களும், ஆனையடிவேம்பு பிரதேசத்தில் 3800 குடும்பங்களும் நிந்தவூர் பிரதேசத்தில் 2500 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன.

வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களின் உடனடித் தேவைகளைக கவனிக்க, சமூக சேவைகள் அமைச்சு 36 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இம்மக்களுக்கான சமைத்த உணவுகளை அந்தந்த பிரதேச செயலகங்களின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டு வருகின்றன.

## வவுனியாவில் சக பொலிஸ் சுட்டு சார்ஜன்ட் பலி

(வவுனியா)

பூந்தோட்டம் மக்கள் நலன்புரி நிலையத்தில் உள்ள பொலிஸார்களிடையே ஏற்பட்ட உட்பூசல் காரணமாக பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் சுட்டதில், மற்றுமோா பொலிஸ் சார்ஜன்ட் ஜெயலத் மரணமடைந்துள்ளார். உப பொலிஸ் பரிசோதகர் ஜெயவர்த்தன என்பவர் படுகாயமடைந்துள்ளார்

(03)

## ஒரே குடும்பத்தை ....

யோரே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள், உடுவில் தெற்கு பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

இவர்களின் இறுதிச்சடங்குகள் பிங்கறிங்ஸ் வீதி ,கொட்டாஞ்சேனையில் இன்று நடை பெறவுள்ளது.

மற்றுமொரு சடலமும் பின்னர் கண்டெடுக்கப்பட்டது. சரஸ்வதி ஸ்ரோர்ஸ் உரிமையாளரான வீரசிங்கம் சூரியகுமாரன் என்பவர் சடலமாக் கண்டெடுக்கப்பட்டார். இவர் மேற்படி குடும்பத்தினரின் உறவினராவர். இவரின் பூதவுடலும் மேறபடி முகவரியில் வைக்கப்படவுள்ளது.

மரணமானவர்களில் ஏனைய இருவர் கணவனும் மனைவியுமாவர். இவர்கள் இருவரும் முஸ்லீம்கள். இறந்தவர்களில் ஏனையவர்களினது சடலங்களை அடையாளம் காண முடியாத அளவிற்கு அவை எரிந்து உருக்குலைந்துள்ளன.

இதனால் பெயர் விபரங்களை வெளியிட முடியாதிருப்பதாக வைததியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை 17 பேர் மரணமடைந்துள்ளனர். காயமடைந்த 28 பேரில் 14 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அவசர சிகிச்சைப்பிரிவு பணிப்பாளர் டாக்டர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில்- சலீம், அருணாசலம், ரவிச்சந்திரன், மாடாசாமி, பரிமளம் , றிகான், புஸ்பமாலா, பாத்திமா, ஜெஸ்மின் , மதீனா, இஸ்வானி, துரைராஜா, துரைரட்னம் ,கந்தபானி, புஸ்பராணி, மதிமுகராஜா, ஆகியோரின் பெயர் விபரங்கள் மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளன.

காயமடைந்தவர்களைப் பார்ப்பதற்கு உறவினர்கள் அனுமதிக்கப்படவில்லை. எரிகாயங்கள் மோசமான நிலையில் இருப்பதனாலேயே உறவினர்கள் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை- தீ விபத்து இடம்பெற்ற இடத்திற்கு சென்று, இரசாயன பகுப்பாய்வாளர்கள் விபத்திற்கான காரணம் குறித்து ஆராய்ச்சி செய்தனர். இறந்தவர்களின் சில தடயங்களையும் அவர்கள் மரபணு பரிசோதனைக்காக எடுத்துச் சென்றனர். தற்போதும் மீட்புப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

## ராணுவ...

மற்றும் இராணுவ கடற்படைகளின் உயர் அதிகாரிகள் பலரும் கூடவே வந்தனர்.

நேற்று மாலை சரியாக 3.45 மணியளவில் விசேட பாதுகாப்பு படையணியின் பாதுகாப்புடன், யாழ்.ஆயர் இல்லத்துக்கு அவர்கள் வந்தனர்.

ஆயர் இல்லத்தில், யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்துடன் மிக முக்கிய சந்திப்பு ஒன்று நடைபெற்றது. மாலை 3.55 மணிக்கு ஆரம்பமாகிய இச்சந்திப்பு- மிக இரகசியமான முறையில் நடைபெற்றது. உதவியாளர்கள் எவருமின்றி, ஆயர் தனியாகவே இச்சந்திப்பில் கலந்து கொண்டார். அதே போல்- கடற்படைத் தளபதியும், இராணுவத் தளபதியும் மட்டுமே இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் கூடவே சென்ற- யாழ். இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, வட பிராந்திய கடற்படைத் தளபதி சரத் வீரசேகர மற்றும் ஏனைய உயர் இராணுவ அதிகாரிகள் அனைவரும் சந்திப்பு நடைபெற்ற மண்டபத்துக்கு வெளியே காத்து நின்றனர்.

மாலை 4.20 மணிவரை மேற்படி சந்திப்பு நீடித்தது. இச்சந்திப்பின்போது, புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குப் பின் யாழ்.குடாநாடு உட்பட வட பகுதியில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ் தேவாலயத்தில் நடைபெறவிருந்த திருவிழிப்பு பிரார்த்தனையில் கலந்து கொள்வதற்காக யாழ்.ஆயர், நேற்றுக் மாலை 3 மணியளவில் அங்கு புறப்படுவதற்கு தயாராக இருந்தவேளையில்- பலாலிப் படைதளத்தில் இருந்து யாழ். ஆயருக்குத் தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைத்தது.

தங்களுடனான மிக முக்கிய சந்திப்பு ஒன்றுக்காக கடற்படைத் தளபதியும், இராணுவத் தளபதியும் ஆயர் இல்லத்துக்கு வருகைதர இருப்பதாக மேற்படி தொலைபேசிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனைத தொடர்ந்து ஆயர் தனது பயணத்தை சில மணி நேரம் பிற்போட்டார். மேற்படி சந்திப்பை நிறைவு செய்த பின்னரே யாழ். ஆயர் ஊர்காவற்துறை சென்றார்.

(க),(லி)

## பாதுகாப்பு.....

கள் தரப்பில் கூறப்பட்டிருந்தது தற்போது இவ் விடயம் தொடர்பாக பாதுகாப்பு உயர் வட்டாரங்களில் ஆராயப்பட்டு வருவதாகவும், முடிவுகள் நாளை மறுதினம் சனியன்று வெளியாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## மாணவர்கள்! நூல் ஆர்வலர்கள்! கவனத்திற்கு

மீண்டும் பல்துறை சார்ந்த புதிய நூற்தொகுதிகள் வரவழைக்கப்பட்டுள்ளன. புத்தகங்கள் தேவையெனப் பதிவு செய்த மாணவர்களும், ஏனையவர்களும் தமக்குரிய புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

தலைவர்,
யாழ்.பேராதனை
பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம்,
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.

(சி/326)

## M(Com) காமராஜர் பல்கலைக்கழகம் [மதுரை]

- மேற்குறிப்பிட்ட பட்டப்பாட நெறிக்கு பல்கலைக்கழகத்தினால் அனுமதிகள் கோரப்பட்டுள்ளன.
- இதற்குரிய பல்கலைக்கழக பதிவுகள் 18-12-2002 இல் இருந்து ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக செய்து கொடுக்கப்படும்
- இதற்குரிய விரிவுரைகள் 05.01.2003ல் ஆரம்பமாக உள்ளன.
- மேற்குறிப்பிட்ட பாடநெறியை தமிழ்/ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பதிவு செய்து கொள்ளமுடியும்.
- பதிவுகள் விரிவுரைகள் பற்றிய சகல விபரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்

விபரங்களுக்கு-
இணைப்பாளர்,
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி/325)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.43 | 96.88 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 152.68 | 155.03 |
| 1 யூரோ | 97.76 | 99.94 |
| 1 சுவிஸ் பிராங் | 67.20 | 68.24 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 54.28 | 55.25 |
| 1 ஜப்பானிய யென் | 00.79 | 00.80 |
| 1 சவூதி றியால் | 25.79 | 25.79 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.